உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2037 கார்த்திகை 16 சனிக்கிழமை (02.12.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 06

தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் கோட்டபாய மயிரிழையில் தப்பினார்

கொள்ளுப்பிட்டியில் அவரது வாகன அணி ஓட்டோ குண்டுவெடிப்பில் சிக்கிச் சிதறியது



கொமாண்டோ காவலர் இருவர் பலி! 16 பேர் படுகாயம்!!

கொழும்பு, டிசம்பர் 2

பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும், ஜனாதிபதியின் சகோதரருமாகிய கோட்டபாய ராஜபக்ஷ, நேற்றுத் தலைநகர் கொழும்பில் - கொள்ளுப்பிட்டிப் பகுதியில் - நடத்தப்பட்ட பெரும் குண்டுத் தாக்குதலில் சிக்கி மயிரிழையில் உயிர்தப்பினார்

மெய்க் காவலர்கள், கொமாண்டோ பாதுகாப்புப் படைகள் சகிதம் கோட்டபாய பயணம் செய்த வாகனத் தொடரணி மீது கொள்ளுப்பிட்டி, தர்மபால மாவத்தையில் - பித்தளைச் சந்தியில் வைத்து - குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

வெடிமருந்து ஏற்றப்பட்ட முச்சக்கர வண்டியைப் (ஓட்டோ) பயன்படுத்தித் தற்கொலைப் பாணியில் நடத்தப்பட்ட இத்தாக்குதலில் பாதுகாப்புச் செயலரின் காவலர்களான கொமாண்டோ வீரர்கள் இருவர் உயிரிழந்தனர். பாதுகாப்புப் படையினர் ஏழு பேர் உட்பட 16 பேர் படுகாயமடைந்தனர். கார்கள், 'பிக்-அப்' உட்பட வாகனங்கள் தீப்பற்றி எரிந்தன.

(08ஆம் பக்கம் பார்க்க)

யாழ். இரத்த வங்கிக்கு கொழும்பிலிருந்து இரத்தம்

யாழ்ப்பாணம், டிசெ.2

வெவ்வேறு வகைகளைச் சேர்ந்த இரத்தம் கொழும்பிலிருந்து விமானம் மூலம் யாழ். ஆஸ்பத்திரி இரத்த வங்கிக்கு நேற்று எடுத்துவரப்பட்டது.

யாழ். பேதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை அடுத்தே கொழும்பிலிருந்து இரத்தம் எடுத்துவரப்பட்டது.

கொழும்பில் இரத்தம் சேகரிக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

இதன் பயனாக சேகரிக்கப்பட்ட ஒரு தொகை இரத்த வகைகள் நேற்று யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்டுள்ளன.

யாழ். இரத்த வங்கிக்குப் பொறுப்பான டாக்டர் சிவசங்கர் இரத்தத்தை விமானம் மூலம் எடுத்துவந்தார்.

இங்கு ஏற்பட்டுள்ள உணவுப் பற்றாக்குறை காரணமாக இரத்ததானம் செய்வோர்

(08 ஆம் பக்கம் பார்க்க)

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் செவ்வாய்முதல் புதிய நடைமுறை அறிமுகம்

இருவர் மட்டுமே உட்செல்ல அனுமதிக்கப்படுவர்

கொழும்பு, டிசெ.2

கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு செல்பவர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தும் பொருட்டு புதிய நடைமுறை எதிர்வரும் 5ஆம் திகதி முதல் அமுலுக்கு கொண்டுவரப்பட உள்ளது.

விமானத்தில் பயணம் செய்வோரையும் திரும்பி வருவோரையும் முறையே அனுப்புவதற்கு அல்லது அழைத்து வருவதற்கு விமான நிலையம் செல்வோரின் எண்ணிக்கை கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இருவர் மட்டுமே உட்செல்ல அனுமதிக்கப்படுவர்.

வாகனத்தில் செல்பவர்களில் சாரதி மற்றும் இருவர் மட்டுமே விமான நிலை

(08 ஆம் பக்கம் பார்க்க)

நகரத்தில் கிளைமோர் வெடித்து பொலிஸார் இருவர் மரணம்

யாழ்ப்பாணம், டிசெ.2

யாழ். நகரப்பகுதியில் - ஆஸ்பத்திரி வீதியில் நேற்று பிற்பகல் 2.45 மணியளவில் இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதலில் பொலிஸ் சார்ஜன்ட் உட்பட இருவர் உயிரிழந்தனர்.

யாழ். ஆஸ்பத்திரியில் இயங்கும் பொலிஸ் பிரிவில் பணியாற்றிய பொலிஸார் கடமை முடிந்து பொலிஸ் நிலையத்துக்குத் திரும்பிக்கொண்டிருந்தபோதே இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

இச்சம்பவத்தில் சார்ஜன்ட் வாசன முதியான்சாகே ரம்பண்டார (வயது 40) அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

படுகாயமடைந்த கருணாரத்ன இலுக்கும்பற (வயது 45) என்பவர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பயனளிக்காத நிலையில் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் குறித்து யாழ். பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு சம்பவ இடத்தில் விசாரணை நடத்தினார்.

யாழ். ஆஸ்பத்திரியில் சடலங்களைப் பார்வையிட்ட நீதிவான் கொழும்பு சட்ட வைத்திய அதிகாரியின் பிரேதப் பரிசோதனையின் பின் அவற்றை உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி உத்தரவிட்டார். (1-68-203)

நோர்வேயை விமர்சனம் செய்யும் அறிக்கைகள் பற்றி போவர் கவலை

அமைச்சர் ரம்புக்வெலவிடம் நேரில் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.2

நோர்வேயின் அனுசரணைப் பணி குறித்து ஊடகங்களில் அண்மையில் வெளியாகிய விமர்சனங்கள் தொடர்பில் போவர் கவலை வெளியிட்டார் எனக்கூறப்படுகிறது.

கொழும்பில் தங்கியிருக்கும் நோர்வேயின் விசேட தூதர் ஜோன் ஹன்ஸன் போவர், வியாழனன்று பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பான பேச்சாளரும், அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெலவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

அப்போதே தமது நாடு குறித்து வெளியான விமர்சனங்களையிட்டு கவலை தெரிவித்தார்.

இச்சந்திப்பின்போது -

விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன், போர் நிறுத்த உடன்படிக்கை குறித்து மாவீரர் தின உரையில் குறிப்பிட்ட கருத்துத் தொடர்பாகப் புலிகளிடமிருந்து

(08 ஆம் பக்கம் பார்க்க)

யாழ். நகர வர்த்தக நிலையங்களில் செயலக அதிகாரிகள் திடீர் சோதனை

நியாய விலையில் உள்ளி வாங்க முண்டியடித்த மக்கள்

யாழ்ப்பாணம், டிசெ.2

நகரப்பகுதியில் உள்ள பல வர்த்தக நிலையங்களில் யாழ். செயலக அதிகாரிகள் நேற்றுத் திடீர் பரிசோதனைகளை நடத்தினர்.

யாழ். அரச அதிபரால் அறிவிக்கப்பட்ட விலைகளை விட அத்தியாவசியப் பொருள்கள் கூடுதல் விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றனவா என்பதைக் கண்டறியும் பொருட்டு திடீர் பரிசோதனைகள் நேற்று

(08 ஆம் பக்கம் பார்க்க)

நான்கு வருடப் போர் நிறுத்தம் புலிகளை பலமுள்ள போர்ப்படையாக்கிவிட்டது!

அமெரிக்காவில் இலங்கை இராணுவத் தளபதி

வாஷிங்டன், டிசி. 2

வாஷிங்டன் வந்திருந்த இலங்கையின் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சரத் பொன்சேகா, கடந்த செவ்வாய்க்கிழமை, அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தில் அரசியல் விவகாரங்களுக்கான பிரதிச் செயலாளர் நிக்கலஸ் பேர்ன்ஸ் உட்பட சிரேஷ்ட அமெரிக்க அரசியல் மற்றும் இராணுவ அதிகாரிகள் பலரைச் சந்தித்துப் பேசி, இலங்கையின் நிலைவரங்களை, குறிப்பாக பாதுகாப்பு மற்றும் அரசியல் நிலைவரங்களை எடுத்துக்கூறினார்.

தனிநாடு கேட்டுப் போராடும் தமிழீழ விடுதலைப் புலிகளின் [illegible] கடும்போக்கை வெளிப்படையாகவே தெரிவித்துவரும் நிக்கலஸ் பேர்ன்ஸுடன் இரா

(08 ஆம் பக்கம் பார்க்க)

இன்றைய கப்பல்சேவை; நேற்றிரவுவரை முடிவில்லை

யாழ்ப்பாணம், டிசெ.2

திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை இன்று இடம்பெறுவது குறித்து நேற்றிரவு வரை முடிவுசெய்யப்படவில்லை என சிவில் நிர்வாக அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இக்கப்பல்சேவை இன்று இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது என்றும் -

கடற்கொந்தளிப்புக் காரணமாக கப்பல் சேவையை இன்று நடத்துவது குறித்து நேற்றிரவுவரை தீர்க்கமான முடிவை செய்ய முடியாதிருந்ததாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புற்றுநோயாளருக்கு பால்மா விநியோகம்

அகில இலங்கை இந்துமாமன்றம் கப்பல் மூலம் அனுப்பிவைத்துள்ள 'கைலன்ட்' பால்மா புற்றுநோயாளர்களுக்கு விநியோகம் செய்யப்படவுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து பிற்பகல் ஒரு மணிவரை கோண்டாவில் சிவபூமி பாடசாலையில் வைத்து பால்மா விநியோகிக்கப்படவுள்ளது.

புற்றுநோயளார்கள் பால்மா பெற வர முடியாத சந்தர்ப்பத்தில் அவர்களது உறவினர்கள் உரிய வைத்திய அத்தாட்சிப் பத்திரத்துடன் வந்து பால வைப் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(1-203)

கண்ணீர் அஞ்சலி

பராமரிப்புப் பிரிவைச் சேர்ந்த கே.பத்மநாதனின் தந்தை

வேலன் கிருஷ்ணன்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாக இயக்குநரும் ஊழியர்களும்,
உதயன்.

(சி-51435)

மரண அறிவித்தல்கள்

இளையவர் நமசிவாயம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

விழிசிட்டி, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் நந்தாவில் வீதி, கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இளையவர் நமசிவாயம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) நேற்று (01.12.2006) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (02.12.2006) சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பா.சேனாதிராசா
(மருமகன்).

நந்தாவில் வீதி,
கொக்குவில் கிழக்கு.

சின்னத்தம்பி இராமலிங்கம்

(இளைப்பாறிய பதிவாளர், மாவட்ட நீதிமன்றம் பிரசித்த நொத்தாரிசு)

ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும், கொழும்புத்துறை, திருகோணமலை ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி இராமலிங்கம் நேற்று (01.12.2006) வெள்ளிக்கிழமை திருகோணமலையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும் செந்தில்குமரன் (சட்டத்தரணி), கயல்விழி, கலையரசி (ஆசிரியை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற க. இராசம்மா, சு. இராசமணி, சி. கனகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் செ. கந்தசாமி, க. சுப்பிரமணியம் நா. சந்திரமாலா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.12.2006) ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

துறைமுகவீதி,
திருகோணமலை.

தகவல்:
இ. செந்தில்குமரன் (மகன் - சட்டத்தரணி).

வேலன் கிருஷ்ணன்

(இளைப்பாறிய இ.போ.ச. நடத்துநர்)

துன்னாலையைப் பிறப்பிடமாகவும், நவிண்டிலை வசிப்பிடமாகவும் கொண்ட வேலன் கிருஷ்ணன் 30.11.2006 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர் திருமதி விக்கினேஸ்வரின் அன்புக் கணவரும் சிவநாதன் (இ.போ.ச. கோண்டாவில்), பத்மநாதன் (உதயன் பணிமனை), பாக்கியநாதன் (ஜேர்மனி), சாந்தகுமார் (மக்கள் வங்கி - யாழ்.), விமலகுமார் (இ.போ.ச - பருத்தித்துறை), செல்வி திவ்விய கௌரி ஆகியோரின் பாசமிகு தந்தையும் திருமதி சி. கமலாதேவி (சுகாதார திணைக்களம்), திருமதி. பா.நந்தினி (ஜேர்மனி) ஆகியோரின் மாமனும் மதுசான், கீர்த்தனா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2006) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நவிண்டிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக எள்ளங்குளம் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவிண்டில்,
கரணவாய் வடக்கு. (சி-51432)

தகவல்:
கி. சிவநாதன் (மகன்).

கணபதிப்பிள்ளை குமாரசேகரம்

(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர் - மின்சாரசபை)

வவுனியா குடியிருப்பை பிறப்பிடமாகவும் இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை குமாரசேகரம் 30.11.2006 வியாழக்கிழமை காலமானார்

அன்னார் கனகலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - தையல் நாயகி தம்பதியரின் அன்பு மகனும் நந்தினி (வவுனியா), மயூரன் (New Kamal Ceremics), மௌலீஸ்வரன் (Lucky Vidio Complex) ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (01.12.2006) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2 மணியளவில் காலைக்கால் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கே.கே.எஸ். வீதி,
இணுவில் கிழக்கு. (55892)

தகவல்:
கு. மயூரன், கு. மௌலீஸ்வரன்
(மகன்மார்).

கண்ணீர் அஞ்சலி

எமது சக உத்தியோகத்தர்
கில்பேட் யோகராசாவின்
அன்புத் தந்தை

ஞானப்பிரகாசம் தேவசகாயம்

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின்ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அத்தியட்சகரும் சக உத்தியோகத்தர்களும்,
துறைமுக அதிகார சபை
பருத்தித்துறை.

தவறிவிட்டது

வைத்தியசாலை வீதி, சங்கானை என்னும் முகவரியைச் சேர்ந்த நல்லதம்பி முருகேசு என்பவர்து தேசிய அ. அட்டை [352231359V] 20.11.2006 அன்று யாழ். நகரில், ஸ்ரான்லி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் அல்லது நகுலா ஜுவலறி கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

மரண அறிவித்தல்கள்

தம்பிமுத்து நடராஜா

(வியாபாரி - திருநெல்வேலி)

கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிமுத்து நடராஜா நேற்று (01.12.2006) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2006) சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் உரும்பிராய் இளங்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

சின்னையா ஆச்சாரி சிவராஜா (சிவா)

கன்னாதிட்டியைப் பிறப்பிடமாகவும், பூநாறி மரத்தடி கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா ஆச்சாரி சிவராஜா நேற்று (01.12.2006) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா ஆச்சாரி- ராசம்மா தம்பதியரின் அன்பு புதல்வரும் காலஞ்சென்ற கிருஷ்ணசாமி ஆச்சாரி - கிருஷ்ணம்மாளின் மூத்த மருமகனும் உமாதேவியின் அன்புக் கணவரும் ராஜேஸ்கண்ணா, செல்வி, பாபு, தர்சிகா ஆகியோரின் அன்புத் தந்தையும், சுபாசன், மனோகரன், கமலேஸ்வரி ஆகியோரின் மாமனும் ஹரிணிகா, றொபின்சா, சாருகேஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான குமாரவேல், செல்லையா, சரோஜா மற்றும் ஞானம், முத்து, திலகம், காமினி, திருக்கேதீஸ்வரன், பரமசிவம், சந்துரு ஆகியோரின் சகோதரனும் துருவலக்சுமி, ராயு காலஞ்சென்றவர்களான குணசேகரம், சரவணமுத்து மற்றும் சைலஜா, கமலா, லட்சுமி, கணபதி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.12.2006) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

அப்புத்துரை விநாயகலிங்கம் (பவுன்)

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த அப்புத்துரை விநாயகலிங்கம் (பவுன்) நேற்று (01.12.2006) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி அப்புத்துரை தம்பதியரின் அன்பு மகனும் திலகவதியின் அன்புக் கணவரும் மதிபாலன் (போதகர்), சிவபாலன், சுபாஷினி ஆகியோரின் தந்தையும் தேவதர்ஷினி, சாயினி, பாலகிருஷ்ணன் ஆகியோரின் மாமனும் செமாயாவின் அன்புப்பேரனும் கந்தசாமியின் (திருமலை) சகோதரருமாவார்.

அன்னாரின்நல்லடக்கம்இன்று (02.12.2006) சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் குச்சப்பிட்டி மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவம் ஏற்றுக் கொள்ளவும்.

வரகையடி றோட்,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

தகவல்:
வி. சண்முகம் (மகன்).
(55889)

45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்	மறைவு
24	19
★	★
10	10
★	★
1947	2006

அமரர் வேலுப்பிள்ளை தியாகராசா (தியாகு)

எம் தந்தையாரின் பிரிவுச் செய்தி கேட்டு, ஓடோடி வந்து எம் துன்பத்தில தாமும் பங்குகொண்டு, எமக்கு பல வழிகளிலும் உதவிய உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எம் நன்றியறிதலை தெரிவிப்பதோடு, இன்று சனிக்கிழமை (02.12.2006) எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்தி நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்துகொண்டு அவரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

நாவலம்பதி,
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி. (சி-51434)

மனைவி,
பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்கள்

திருமதி நாகராசா மகேஸ்வரி

நீர்வாவியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது வவுனியாவில் வசித்தவருமாகிய திருமதி நாகராசா மகேஸ்வரி 30.11.2006 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கதிரவேலு - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நாகராசாவின் அன்பு மனைவியும் அமரசிங்கம் (அப்பு), பத்மாவதி, இந்திராவதி, முத்துக்குமாரசாமி (லக்ஸ்மன் தொலைத் தொடர்பகம்), நற்குணசிங்கம் (சுவிஸ்), வசிந்திரா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் யோகமலர், கனகரட்ணம் வானீஸ்வரன், சுகிர்தா (ஆசிரியை யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), இந்துமதி (சுவிஸ்), ரவீந்திரன் (சுவிஸ்), ஆகியோரின் அன்பு மாமியும் சதீஷ்குமார், கீத்தானி, தமிழ்ச்செல்வி, பிரசாயினி, சயானா, கிருயன், கிஷாந்த், ஆரோன், லக்ஷ்மன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஹாம்சிக்காவின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

உக்குளாங்குளம்,
வவுனியா.
தொ.பே. 024 222 4649. (55886)

தகவல்:
நா. முத்துக்குமார் (மகன்).

திருமதி நாகராசா நேசமணி

காரைநகர் களபூமியை பிறப்பிடமாகவும் குமாரசாமி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகராசா நேசமணி நேற்று (01.12.2006) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் வைத்திலிங்கம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற நாகமுத்து - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நாகராசாவின் (யாழ். பொது நூலகம்), அன்பு மனைவியும் தவராணி, ஜெயராணி, புஸ்பராணி (கனடா), கலாராணி (ஜேர்மனி), பத்மராணி (கலாசார உத்தியோகத்தர் -பிரதேச செயலகம் சண்டிலிப்பாய்), நாகேந்திரராசா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் ஹரிந்திரன் (யாழ். ப.நோ.கூ.ச.), தர்மராசா (கனடா), இராஜேந்திரா (ஜேர்மனி), இரவீந்திரன் ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2006) சனிக்கிழமை காலை 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

74/15 ஆத்திகுடி வீதி,
கந்தர்மடம். (55891)

தகவல்:
மக்கள், மருமக்கள்.

திருமதி பிலிப் அந்தோனிப்பிள்ளை

குருநகரைச் சேர்ந்த திருமதி பிலிப் அந்தோனிப்பிள்ளை நேற்று (01.12.2006) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிமியான் பிலிப்பின் (சம்மாட்டி) அன்பு மனைவியும் அன்னமலர், யோசப்பின் ஆகியோரின் சகோதரியும் பிறேமா (லண்டன்), இயூஜின் (யா/ சென். ஜேம்ஸ் பெ.வி.), பிறேமன், சூசைதாசன் (ஜேர்மன்), ஜீன் ஆகியோரின் அன்புத் தயாயும் ஜேசுதாசன் (லண்டன்), காலஞ்சென்ற பங்கிராஸ் ஜூலியஸ், மக்சிமாலா, மேசி (ஜேர்மன்), வின்சலோஸ் ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (02.12.2006) சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் புனித யாகப்பர் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலியின் பின்பு கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

66, 6ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 222 9404. (55884)

தகவல்:
திருமதி இயூஜின் ஜூலியஸ்
(மகள் - ஆசிரியை).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுமக்கள் மீது ஸ்ரீலங்கா அரசு தாக்குதல்களை நடத்த முடியாது

இணைத் தலைமை நாடுகள் தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.2

பொது மக்களுக்கு இழப்பு ஏற்படுத்தும் வகையில் நடத்தும் தாக்குதல்களை ஸ்ரீலங்கா அரசு நடத்த முடியாது என்று இணைத் தலைமை நாடுகள் தெரிவித்துள்ளன.

விடுதலைப் புலிகள் தரப்பு, மக்களைக் கவசமாகப் பயன்படுத்தினாலும் ஸ்ரீலங்கா அரசு மக்கள் மீது தாக்குதலை நடத்தக் கூடாது என்று இணைத் தலைமை தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிடம் இணைத் தலைமை நாடுகள் சார்பில் ஜேர்மன் தூதுவர் ஜர்கள் விரீத் இதனைத் தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கில் எதிர்நோக்கும் மனிதாபிமான நெருக்கடிகள் குறித்து ஸ்ரீலங்கா மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்கவுடனும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுடனும் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளும், ஐ.நா. உதவி நிறுவனங்களின் பிரதிநிதிகளும், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பிரதிநிதிகளும் பேச்சு நடத்தியபோது அரசுக்கு இது தெரிவிக்கப்பட்டது.

உதவிப் பொருள்கள் எடுத்துச் செல்லப்படுவதை முன்னிட்டு அனைத்துத் தாக்குதல்களையும் நிறுத்துவதற்காக விடுதலைப் புலிகள் தரப்பு உறுதியளித்திருந்த போதும் இராணுவம் எறிகணைத் தாக்குதல்களை நடத்தியது குறித்து அரசு மீது குற்றம் சாட்டப்பட்டது. தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் மூவர் காயமடைந்தனர்.

சட்டபூர்வமான அரசு, பொதுமக்களுக்குச் சேதம் ஏற்படும் வகையில் தாக்குதல்களை நடத்தக் கூடாது. விடுதலைப் புலிகள் மக்களைப் பற்றிக் கவலை கொள்ளாதிருந்தாலும், இலங்கை மக்களைப் பாதுகாக்க வேண்டியது அந்நாட்டின் அரசினதும், அரச தலைவரினதும் கடமை - என்று ஜேர்மன் தூதுவர் வலியுறுத்திக் கூறினார். (ஐ)

யாழ்ப்பாணத்துக்கும் வாகரைக்கும் செல்கின்ற உணவு லொறிகளைப் புலிகளே தடுக்கின்றனர்!

நாடாளுமன்றில் விமல் வீரவன்ஸ எம்.பி.

கொழும்பு, டிச.2

வடக்கு-கிழக்கில் தமிழ் மக்களை அரசு பட்டினி போடுவதாக சர்வதேச ரீதியில் பிரசாரம் செய்து அனுதாபத்தைப் பெறுவதற்காகவே வாகரைக்கும் யாழ். குடாநாட்டுக்கும் உணவு லொறிகள் செல்லவிடாது புலிகள் தடுக்கின்றனர் - என்று ஜே.வி.பி. நாடாளுமன்றக் குழுத் தலைவர் விமல் வீரவன்ஸ எம்.பி. நேற்றுமுன்தினம் சபையில் விஷேட அறிக்கையொன்றை விடுத்துப் பேசும் போது குற்றஞ்சாட்டினார்.

நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம் காலை 9.30 மணிக்கு சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம்.லொக்கு பண்டார தலைமையில் கூடியது. விமல் வீரவன்ஸ எம்.பி. தொடர்ந்து கூறியதாவது:-

அத்தியாவசிய பொருட்கள் மருந்துவகைகள் ஏற்றப்பட்ட லொறிகள் உள்நாட்டு, வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவன பிரதிநிதிகளின் கண்காணிப்பின் கீழ் வாகரைக்கு செல்லவிருந்தன. உணவு லொறிகள்அங்கு செல்ல வசதியாக தாக்குதல் நடத்த மாட்டோமென புலிகள் அரசசார்பற்ற நிறுவனங்களிடம் உறுதியளித்திருந்தனர். இருந்தும் புலிகள் கஜுவத்த வாகரைப் பிரதேசத்துக்கு மேலதிக ஆளணியையும் ஆயுதங்களையும் கொண்டுவர இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த முற்பட்டதால் 85 லொறிகள் மாத்திரமே வாகரைக்குச் சென்றன.

புலிகள் வக்கற்றவர்கள்

தனியான நிர்வாகம் நமக்கு இருப்பதாகக் கூறிக்கொள்ளும் புலிகள் இந்த மக்களுக்கு உணவுப் பொருட்களையும் மருந்து வகைகளையும் பெற்றுக் கொடுக்க வக்கற்றவர்கள் என்பது தெளிவாகிறது. எனவே திட்டமிட்ட வகையில் வாகரைக்கு உணவுப் பொருட்களையும் மருந்து வகைகளையும் கொண்டு செல்வதைத் தடுக்கின்றனர்.

இதேவேளை, யாழ்.குடாநாட்டுக்குத் தேவையான உணவு மற்றும் மருந்து வகைகளை ஏ-9 வீதிவழியாக அனுப்பிவைக்க அரசு எடுத்த முயற்சிகளுக்கும் புலிகள் தடைவிதித்துள்ளனர். தமிழ் மக்களைப் பட்டினிபோடுவதற்காக உலகம் முழுவதும் வாழும் தமிழ் சமூகத்தையும் அரச சார்பற்ற அமைப்புகளையும் அரசுக்கெதிராக தூண்டிவிடுவதற்காகவே புலிகள் இந்தப் பிரசாரத்தை மேற்கொள்கின்றனர்.

வேலுப்பிள்ளை பிரபாகரன் தனது மாவீரர் தின உரையில் அரசு தமிழ் மக்களுக்கு எதிராக இரு முனையில் யுத்தத்தை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். ஒருபுறம் தமிழ் மக்களைப் பட்டினிபோடுவதாகவும் மறுபுறம் யுத்தத்தை ஆரம்பிக்கவுள்ளதாகவும் அந்த உரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்பாவி மக்களுக்கு உணவு மற்றும் மருந்து வகைகளை அனுப்பி வைக்க தடைவிதிக்கப்படுமானால் பொறுப்புள்ள அரசுக்கு வேறெதுவும் செய்யமுடியாது. எனவே வாகரை மக்களை பயங்கரவாதிகளின் பிடியிலிருந்து மீட்டெடுக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென கேட்டுக்கொள்கின்றோம். - என்றார்.

ஆசிரியர் செயலமர்வுகள்

வடமராட்சி கிழக்கு,டிசெ.2

2007ஆம் ஆண்டு பாடசாலைகளில் தரம் 6, தரம் 10 ஆகிய வகுப்புகளில் அறிமுகப்படுத்தப்படவிருக்கும் புதிய பாடத்திட்டத்திற்கான செயலமர்வுகள் வடமராட்சி கல்வி வலயத்தில் நடைபெறவுள்ளன.

தரம் 6 புவியியல், வரலாறு பாடங்களுக்கான செயலமர்வு வடமராட்சி ஆசிரிய நிலையதிலும் தரம் 10 விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் பாடத்திற்கான செயமர்வு பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியிலும், தரம் 6, தரம் 10 ஆங்கிலப் பாடத்திற்கான செயலமர்வும் பருத்தித்துறை வட இந்து மகளில் கல்லூரியிலும் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளன.

தரம் 6 இல் தமிழ் புதியபாடத் திட்டத்திற்கான செயலமர்வு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும் தரம் 10 இல் வரலாறு புதிய பாடத்திட்டத்திற்கான செயலமர்வு வடமராட்சி ஆசிரிய நிலையத்திலும் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளன.

தரம் 6 விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் புதிய பாடத்திட்டத்திற்கான செயலமர்வு பருத்தித்துறை இந்து மகளிர் கல்லூரியிலும் தரம் 10 இல் கணிதம் புதிய பாடத்திற்கான செயலமர்வு நெல்லியடி மத்திய மகாவித்தியாலத்திலும் நாளைமறுதினம் திங்கட்கிழமை நடைபெறவுள்ளன. (202-182)

* * *

வடமராட்சி கிழக்கு,டிசெ.2

வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளில் தரம் 9 இல் கணித பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று சனிக்கிழமை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இவ்வகுப்பில் கணித பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (202-182)

சிக்குன் குனியா நோய் தடுப்பு வாரம் தென்மராட்சியில் அனுஷ்டிப்பு

தென்மராட்சி கல்வி வலயத்தினால் கடந்த வாரம் சிக்குன் குனியா நோய் தடுப்பு வாரம் அனுஷ்டிக்கப்பட்டது.

கல்வி வலய அலுவலகத்தில் உதவிக் கல்விப்பணிப்பாளர், சேவைக்கால ஆசிரியர்கள், அதிபர்கள் ஆகியோருக்கு உரிய அதிகாரிகளால் சிக்குன்குனியா நோய்த்தடுப்பு தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு நடத்தப்பட்டது.

ஒவ்வொரு பாடசாலையிலும் வலயக் கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், சேவைக்கால ஆசிரியர்கள், பாடசாலை அதிபர்கள் ஆகியோரால் ஆசிரியர், மாணவ ருக்கு விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன.

பாடசாலைச் சுற்றாடல் அதிபர், ஆசிரியர், மாணவர்கள் ஆகியோரால் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டதுடன் ஒவ்வொரு மாணவரும் தமது வீடுகளின் சூழலையும் துப்புரவினை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

யாழ்.பிராந்திய உள்ளூராட்சித் திணைக்கள சனசமூக அபிவிருத்தி அலுவலர் திருமதி செ.ஜெகதீசன், சாவகச்சேரி நகர சபை, சாவகச்சேரி பிரதேச சபை ஆகியவற்றின் உள்ளூராட்சி உதவியாளர்கள், நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்கள், அனர்த்தப் பிரிவு பொது சுகாதாரப் பரிசோதகர்கள் ஆகியோரும் பாடசாலைகளில் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்தினர். (203)

வடமராட்சி வலயத்தில் கற்பித்தல் சாதனப் போட்டி

வடமராட்சி,டிசெ.2

வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான கணித, விஞ்ஞான பாட கற்பித்தல் சாதனப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (202-182)

பதவி உயர்வு நேர்முகப்பரீட்சை

வலி.மேற்கு,டிசெ.2

யாழ்.சுகாதாரத் திணைக்களத்தில் சாதாரண தொழிலாளர் பதவிக்கு விண்ணப்பித்திருந்த திணைக்களத்தில் பணியாற்றும் சுத்திகரிப்பு தொழிலாளர்களுக்கான பதவி உயர்வு வழங்குவதற்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் புதன்கிழமை யாழ்.சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனையில் நடைபெறவுள்ளது. (202-135)

றெக்கிளமேசன் கிழக்கில் பங்கீட்டு அட்டை மீளாய்வு

யாழ்ப்பாணம்,டிசெ.2

யாழ்.பிரதேச செயலகத்திற்குட்பட்ட றெக்கிளமேசன் கிழக்கு(ஜே/68)கிராம சேவையாளர் பிரிவுக்கான பங்கீட்டு அட்டைகள் மீளாய்வு எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் குருநகர் தொடர்மாடி சன சமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (202)

சட்டமாணிப் பரீட்சை எதிர்வரும் புதன்கிழமை

யாழ்ப்பாணம்,டிசெ.2

யாழ்ப்பாணம் திறந்த பல்கலைக் கழகத்தின் சட்டமாணிப் பரீட்சைகள் எதிர்வரும் 6ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பித்து நடைபெறவுள்ளதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கொழும்பில் இருந்து எடுத்துவரப்படவேண்டும். எனினும் இதுவரை விண்ணப் பொதிகள் வந்துசேரவில்லையென்றும் -

கப்பலில் பொதிகள் எடுத்துவரப்படுவதை எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (202-111-88)

சமய சந்நிதிகளில்

சுழிபுரம்,டிசெ.2

பண்ணாகம் விசுவத்தனை முருகமூர்த்தி ஆலய குமாரலய தீப கார்திகைத் தீபத் திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 9 மணிமுதல் வள்ளியம்மன் திருமண புராணபடனப் படிப்பும் பிற்பகல் சுவாமி வீதியுலா வந்து சொக்கப்பானை கொழுத்தும் நிகழ்வும் இடம்பெறும். (203-28)

* * *

யாழ்ப்பாணம்,டிசெ.2

சரசாலை நுணுவில் சிதரம்பர விநாயகர் ஆலய வருடாந்த பிள்ளையார் கதை அபிஷேகம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பூசை வழிபாடுகளுடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 21 தினங்கள் அபிஷேகம் பூசை வழிபாடுகளுடன் பிள்ளையார் கதைப் படிப்பும் இடம்பெறவுள்ளது. (203)

* * *

சுழிபுரம்,டிசெ.2

அராலி கிழக்கு ஆவரசப்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சமயதீட்சை வழங்கும் நிகழ்வு நடைபெறவுள்ளது.

தீட்சாகுரு சிவஸ்ரீ சுந்தரராஜக் குருக்கள் தீட்சை வழங்கவுள்ளார்.

சமயதீட்சை பெறவிரும்புவோர் ஆலய குருவிடம் அல்லது பரிபாலன சபையினரிடம் தொடர்புகொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது. (203-28)

* * *

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வர் ஆலயத்தில் நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு சமய தீட்சை வழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

பிற்பகல் 2 மணிக்கு விளக்கீட்டுப் பூசையும் சுவாமி வீதியுலா வருதலும் இடம்பெறவுள்ளன. (203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதய அஞ்சலி

எமது வித்தியாலய ஆசிரியை
திருமதி தே.பத்மலோசினியின் அன்புக் கணவர்
இராசையா தேவமனோகரன்

அவர்களின் திடீர் மறைவையிட்டு எமது இதயம் நெகிழ்ந்த அஞ்சலியைத் தெரிவிப்பதோடு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நவாலி, மானிப்பாய். (55800)

நவாலி மகா வித்தியாலய சமூகம்.

கண்ணீர் அஞ்சலி

அமரர் கியூபேட் ஆனந்தராஜன்

எமது கல்லூரியின் அரசியல் விரிவுரையாளர் கியூபேட் ஆனந்தராஜாவின் திடீர் மறைவிற்கு எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்துவதோடு அன்னாரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

புதிய உயர் கல்லூரி கல்விச் சமூகம்..

12ஆம் ஆண்டில் நெஞ்சம் மறவாத நினைவுகள்

மண்ணில் 27 . 11 . 1949 — விண்ணில் 17 . 11 . 1994

அமரர் சிவகுரு நவரத்தினம்
(உரிமையாளர் கனகா பத்திரிகை விற்பனை நிலையம், திருநெல்வேலி)
திதி:திரயோதசி

எத்தனை ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
எப்படி உங்களை மறக்கலாம் அப்பா
சித்தத்தில் என்றும் நிறைந்தீர்கள்
சிறப்பெலாம் தேடித் தந்தீர்கள்
நித்தமும் உங்களை நினைத்தே வாழ்கின்றோம்
நினைப்பதை யெல்லாம் முடித்து வைக்கின்றீர்கள்
அத்தனின் பாதம் சேர்ந்தே வாழ்கின்றீர்கள்
அப்பா! அப்பா! என்றே அஞ்சலித்து நின்கின்றோம்.

நிரந்தர முகவரி: கைதடி கிழக்கு, கைதடி.
தற்காலிக முகவரி: இல. 60, பலாலி வீதி, திருநெல்வேலி. **மனைவி, பிள்ளைகள்.**

31ஆம் நாள் நினைவலைகள்

தோற்றம் 09 * 04 * 1922 — மறைவு 02 * 10 * 2006

கந்தையா வள்ளியம்மை

கண்ணாகக் கருத்தாகக் கருதியெம்மை வளர்த்தெடுத்த புண்ணிநின் கணில்விழிக்கும் பொழுதுதான் அமைந்ததில்லை அனைத்திலுமே நினதினிய அமைதிமுகம் தனைக் காண்போம் நினைவெல்லாம் நிறைந்திருந்து நிழலாக மறைந்தீர்கள் கனவினிலே அதுதானும் கனவுமுகம் விழிப்பதெப்போ உம் ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுகின்றோம் ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தகவல்: பாபு கௌரி (சுவிஸ்) (55791)

நீங்கா நினைவுகளுடன், **குடும்பத்தினர்.**

ஓராண்டு நினைவஞ்சலி

திருமதி
சதாசிவம் நேசரத்தினம்
திதி: அபரபக்கம் திரயோதசி

தோற்றம் 28.12.1948 — மறைவு 13.12.2005

ஆண்டு ஒன்று ஓடிவிட்டது
அன்னையே உனைப் பிரிந்து
தாண்டும் தடைகளுக்கு வேரென நீ இருந்தாய்
விழுதுகளாய் நாம் இருந்தோம்
கூண்டுக்கிளிகள் ஆனோம் நாம்
பறக்கச் சிறகில்லை எமக்கு
மாண்டுவிட்டாள் நேஷா
என மானிடர் நினைத்தீரோ
மீண்டும் வந்து எம் மண்ணில்
பாச உருவே நீ பிறந்திட
வேண்டுகின்றோம் பரமனடி
பாதம் பணிந்து
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அல்வாய்கிழக்கு, அல்வாய். (சி/51419)

சதாசிவம் குடும்பத்தினர்.

பயணிகள் தங்கும் மண்டபங்கள் புனரமைப்பு

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலைய பயணிகள் தங்கும் மண்டபங்கள் புனரமைக்கப் படுகின்றன.

பயணிகள், தங்கும் மண்டபங்களில் மழை ஒழுக்குக் காரணமாக தங்கி நிற்க முடியாத நிலையில் உள்ளனர். பயணிகளின் சௌகரியங்களைப் பாதுகாக்கும் பொருட்டு மண்டபங்களின் கூரைகள் புதிதாகப் போடுவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அகவை எட்டில் நினைவஞ்சலி



அமரர்
வடிவேற்கரசு தேவசுதா (நிதியா)
திதி: 02.12.2006

அன்னை மடியில் 02.02.1987 — ஆண்டவன் அடியில் 01.12.1998

நித்தம் நித்தம் இறைவனை வேண்டுகின்றேன்
என் நிதியாவை நான் பெற்றெடுத்தேன்
அத்தன் ஆனந்தன் எனக்கு அழுதென
உவந்து வைத்தான்
பெற்ற என் வயிறு நோவ ஆ! அந்த
காலன்தான் நினைக் கவர்ந்து சென்றான்
இற்றைக்கு ஆனதோ அகவை எட்டு - என்றைக்கும்
என் வயிறு ஆறுமோ மகளே!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உன் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கும்
அம்மா
திருமதி செல்வராணி வடிவேற்கரசு (வைத்தீஸ்வரன்)

'சித்தம்பாதி' கரணவாய் தெற்கு, கரவெட்டி. (55795)

UNI TECHNOLOGY

அனுசரணையோடு
நல்லூர் றோட்டறக்ட் கழகத்தினால்
க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான இலவச வழிகாட்டல் பரீட்சையும் கருத்தரங்கும்

இடம் : மானிப்பாய் பிரதேச சபை மண்டபம்
காலம்: 02.12.2006 சனிக்கிழமை (இன்று)
நேரம் : மு.ப.10 மணி
கணிதம் : திரு பா.ஜெயசாந் (பிரபல ஆசிரியர்)
ஆங்கிலம் : திரு.ந.சுதர்சன்
(ஆசிரியர் - யா/ கனகரத்தினம் மகா வித்தியாலயம்)

குறிப்பு: மாதிரி வினாத்தாள்கள் இலவசமாக வழங்கப்படும்.

கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியர் திரு. செ.சிவகுமார் அவர்களின் பாசமிகு தந்தை
சற்குணம் செல்வநாயகம்
அவர்கள் காலமானதை அறிந்து ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/புங்குடுதீவு ஸ்ரீ சித்திவிநாயகர் மகா வித்தியாலயம்.
புங்குடுதீவு -05

புலமைப்பரிசில் பரீட்சை வழிகாட்டி வகுப்புகள்

பிரபல ஆசிரியர் இரா.ஜெயக்குமார்
பிரிவு 11
அனுதிகள் வழங்கப்படுகின்றது.
மதுகல்வி நிறுவனம்
டச்சுவீதி, இருபாலை, கோப்பாய்.

மரண அறிவித்தல்

கியூபேட் ஆனந்தராஜன் B.A
(கிராம உத்தியோகத்தர் தரம் 1, ஜே/70, அகில இலங்கைச் சமாதான நீதவான்)

யாழ்ப்பாணம் 2ஆம் குறுக்குத் தெருவைப் பிறப்பிடமாகவும் 16,சிறாம்பியடியை வசிப்பிடமாகவும் கொண்ட கியூபேட் ஆனந்தராஜன் அவர்கள் 30.11.2006 வியாழக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குழந்தை இராஜதுரை - றோசலின் தம்பதியரின் அன்பு மகனும் ஜெயசுதாவின் அன்புக் கணவரும் யதுஷன், யதுஷினி (தரம் 2, ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), நிருஷினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் இராஜபிறேமா, மரியநாயகம் (ஆசிரியை - யா/ வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் தளையசிங்கம்-நாகலட்சுமி (மலர்) தம்பதியரின் மருமகனும் ஜெயரட்சகன் (ஜேர்மனி), ஜெயந்தி (பிரான்ஸ்), ஜெயக்குமார் (பிரான்ஸ்), ஜோசப்மரியநாயகம் (யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் மைத்துனரும் ஜெயந்தி (ஜேர்மனி), பிறேமா (பிரான்ஸ்), ஜோகராசா (பிரான்ஸ்) ஆகியோரின் சகலனும் லூட்ஸ், பூரணி (ஜோன்பொஸ்கோ வித்தியாலயம்), துவாரகா, துஷிகா ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் (02.12.2006) சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ் அடைக்கல அன்னை ஆலயத்தில் திருப்பலி ஆராதனை நிறைவேற்றப்பட்டு, யாழ் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: 16,சிறாம்பியடி, யாழ்ப்பாணம். **மனைவி, சகோதரி, மைத்துனர்.**

வாழுங்கலை அற நிறுவனம்

வாழுங்கலைப் பயிற்சி எடுத்த பக்தர்களுக்கான சுதர்சன் கிரியா மற்றும் சற்சங்கம்.

இடம் : நல்லூர் கம்பன் கோட்டம்
காலம் : இன்று 2ஆம் திகதி பி.ப 3 மணிக்கு

இடம் : யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி
காலம் : நாளை 03ஆம் திகதி ஞாயிறு காலை 9 மணி.

5ஆவது ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 24 * 09 * 1963 — மறைவு 27 * 11 * 2001

திருமதி அருள்ராசலிங்கம் ரேவதிதேவி
திதி: துவாதசி (2.12.2006)

ஆண்டுகள் ஐந்து ஓடி மறைந்தாலும்
ஆறாது உங்கள் பிரிவுத் துயர்
என்றும் உங்கள் நினைவுடன்,

குப்பிளான், ஏழாலை (55783)

கணவர், தாய், சகோதரர்கள்.

தொடரும் நெஞ்சின் நினைவுகள்

மலர்வு 07.05.1932 | 02.08.1922
உதிர்வு 12.12.2005 | 21.10.2000

முருகேசு தங்கம்மா (முதலாம் ஆண்டு திதி : 02.12.2006) — **மருதர் முருகேசு** (ஆறாம் ஆண்டு)

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
எங்கள் நலமும் எங்கள் மகிழ்வும்
என்றும் நிலையாகக் கொண்டு வாழ்ந்து
அன்பு நெஞ்சங்களே இன்று இம்மண்ணில்
நீங்கள் இல்லாவிட்டாலும் எங்கள் உள்ளமதில்
உங்கள் நினைவுகள் நிழலாகத் தொடரும்.

நாச்சிமார் கோயில் வீதி, நவாலி, மானிப்பாய். (55855)

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மரண அறிவித்தல்

சின்னையா ஆச்சிப்பிள்ளை

கைதடி, நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் கைதடி தெற்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா ஆச்சிப்பிள்ளை நேற்று (01.12.2006) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சப்பாதி சின்னையாவின் அன்பு மனைவியும் புலேந்திரன், நாகேஸ்வரி, லோகநாதன், திருபுவனி, குணபாலன் ஆகியோரின் அன்புத் தாயும் அரங்கநாயகி காலஞ்சென்ற கந்தையா, புஸ்பமலர், குமாரசாமி, தெய்வநாயகி ஆகியோரின் அன்பு மாமியும் சசிக்குமார், சசிரஜனி, சசிகாந்தன், சசிரூபன், கோசலா, பரிமளா காலஞ்சென்ற சனகன், பங்கஜயம், விநோதன், ஜெயரூபா, விசிதரன், விஜி, திருக்குமரன் ஆகியோரின் அன்புத் பேரனும் கோபிகா, ஜனுரன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2006) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக ஊரியான் மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி: கைதடி தெற்கு, கைதடி.
நிரந்தர முகவரி: கைதடி நாவற்குழி, கைதடி.

தகவல்: சி.புலேந்திரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு - கிழக்குத் தீர்வு தொடர்பாக

தமிழ் - முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் பேச்சு நடத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் கூறுகிறார்

கொழும்பு, டிசெ.2

வடக்கு -கிழக்குத் தீர்வு தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களும் முஸ்லிம் கட்சிகளின் தலைவர்களும் பேச்சு வார்த்தை நடத்த வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. இப் பேச்சுவார்த்தை நடைபெற வழி செய்ய வேண்டிய தார்மீகப் பொறுப்பு இலங்கை, இந்திய அரசுகளுக்குண்டு என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் 20 ஆவது ஆண்டு நிறைவு விழா மருதானையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றுகையில் அவர் கூறியதாவது:-

தமிழ்த் தேசிய தலைமைகளுடன் முஸ்லிம் தலைவர்கள் தேவையேற்படும் பட்சத்தில் பேச்சுவார்த்தை நடத்த டில்லி ஏற்பாடுகளை மேற்கொள்ளும் என்று இந்திய அரசு அளித்த வாக்குறுதியைக் காப்பாற்ற வேண்டிய காலம் ஏற்பட்டுள்ளது.

வட கிழக்கு மாகாண இணைப்புத் தொடர்பில் முஸ்லிம்களிடம் எதுவும் அன்று கேட்கவில்லை. இன்று பிரிப்பு தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸை விமர்சிக்கவும் சிலர் ஆரம்பித்துள்ளனர். முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவம் நழுவல் போக்கை கடைப்பிடிப்பதாகக் குற்றஞ்சாட்டப்படுகின்றது. நீதி மன்றத்தின் தீர்வு முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் தான் தமிழ் - முஸ்லிம் அரசியல் தலைமைகள் பேச வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என்பதை வலியுறுத்த விரும்புகின்றேன். தமிழ்க் கட்சித் தலைமைகள் என்ன நிலைப்பாட்டைக் கொண்டிருந்த போதும் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் முஸ்லிம்கள் தனித்துவமான இனம் என்பதை எம்முடன் செய்து கொண்ட உடன்படிக்கையில் ஏற்றுக்கொண்டுள்ளார்.

இன்று இருபெரும் தேசியக் கட்சிகளும் இணைந்துள்ளன. இத்தகைய இணைவு இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் பலனளிக்க வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து இரு கட்சிகளினதும் இணைவு அடுத்து வரும் மூன்று மாதங்களில் எப்படியிருக்கும் என்று கூறமுடியாது.

அரவணைக்கத் தயார்

தமிழ் - முஸ்லிம் அரசியல் தலைமைகளின் பேச்சு இடம்பெறுமாயின் அது இனப்பிரச்சினைத் தீர்வு பற்றி இருபெரும் கட்சிகளும் நியாயமாக ஏற்றுக்கொள்ளத்தக்க தீர்வு யோசனைகளுக்கு பலமூட்டும் என்பதில் ஐயமில்லை என்பதை குறிப்பாக இந்தியா புரிந்துகொள்ள வேண்டும். ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கரஸ் கட்சியின் அடிப்படைக் கொள்கைகளுடன் முரண்பாடு இல்லாமல் அரசியல் செய்யும் அனைவரையும் அரவணைக்கத் தயாராகவுள்ளது. எனவே, பிரிந்து சென்றவர்களை மீண்டும் வந்து இணையுமாறு அழைப்பு விடுக்கின்றோம். முஸ்லிம் சமூகத்தின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்துகொள்ள எம்மிடையில் ஒட்டுமொத்த அரசியல் பலம் அவசியமாகும்.

நாம் எதிர்க்கட்சியில் இருப்பதால் எமது அரசியல் பலம் குறையவில்லை. நாம் அங்கீகாரம் இழக்கவில்லை. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சின்னத்தைப் பறிப்பதற்கு நடைபெற்ற சக்திகளுக்கு மத்தியில் பதினொரு உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகத்தைக் கைப்பற்றியுள்ளோம். கடந்த இருபது வருடங்களில் சாதித்தவைகளைவிட எதிர்காலத்தில் சாதிக்க வேண்டியவைகள் தான் அதிகமாயுள்ளன. ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் அடுத்த யுகத்தில் பிரிந்து போனவர்களை ஒன்று சேர்க்கும் பணியை மேற்கொள்ளும் - என்றார்.

இவ்விழாவில் கலந்துகொண்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

வட கிழக்கு தமிழ் பேசும் மக்களாகிய தமிழர்களினதும் முஸ்லிம்களினதும் தாயகமாகும். கடந்த காலங்களிலும் வடகிழக்கு இவ்விரு சமூகங்களினதும் தாயகமாய் இருந்தது போல் இனிமேலும் தாயகமாய் இருக்கும். இதனை எவராலும் மாற்ற முடியாது. சமத்துவத்தின் அடிப்படையில் இரு சமூகங்களையும் இணைக்க முடியும்.

முஸ்லிம்கள் மத்தியில் ஒற்றுமைக்கு விளக்கம் கொடுத்து சிறுபான்மை சமூகங்கள் சகலஉரிமைகளையும் பெற்று வாழ ஒன்று படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் ஆவார். முஸ்லிம் சமூகம் பலமடைய வேண்டும். முஸ்லிம் காங்கிரஸ் பலமடைய வேண்டும். அற்ப சொற்ப சலுகைகளுக்காக விலகிப்போனவர்கள் மீண்டும் முஸ்லிம் காங்கிரஸில் இணைந்து கொள்ள வேண்டும்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனது சமூகத்திற்கு மட்டுமன்றி பிறசமூகத்தின் உரிமைகளுக்கும் குரல் கொடுக்கின்றது. வடகிழக்கில் தமிழ் மக்களுக்குள்ள சகல உரிமைகளும் முஸ்லிம்களுக்கும் உண்டு. இனிவரும் காலங்களிலும் இவ்விரு சமூகங்களும் இணைந்து வாழத் தான் போகின்றன. ஒவ்வொரு சமூகமும் மற்ற சமூகத்தை மதித்து வாழும் நிலை ஏற்பட வேண்டும். வட கிழக்கில் வாழும் சிங்களவர்களுக்கு நாம் அநீதி இழைக்க முடியாது. இன்று தமிழ் இனம் அழிக்கப்படுகின்றது என்றால் நாளை முஸ்லிம் இனம் அழிக்கப்படுவது நிச்சயமாகும் - என்றார். (202)

பொதுசன உதவிப் பணம் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், டிசெ.2

வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இம்மாதத்துக்கான பொதுசன மாதாந்த உதவிப் பணக் கொடுப்பனவுகள் நேற்றுமுதல் வழங்கப்பட்டுவருகின்றன.

புற்றுநோய், காசநோய், தொழுநோய் என்பனவற்றுக்கான கொடுப்பனவுக்குரிய பத்திரங்கள் தபாலகங்கள் மற்றும் உப தபாலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் 9ஆம் தகிதிக்கு முன்னர் இக் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு வலிகாமம் கிழக்கு பிரதேச செயலக சமூக சேவைகள் அலுவலகர் கேட்டுள்ளார். (203)

வழிகாட்டல் கருத்தரங்கு

மல்லாகம் சதாசகாய அன்னை பங்கு இளைஞர் ஒன்றியததினர் ஜி.சீ.ஈ. சாதாரண தர மாணவர்களுக்கு நடத்திவரும் பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கில் நாளை மறுதினம் திங்கட்கிழமை தமிழ், சமூகக் கல்வி,கணிதம் பகுதி II ஆகிய பாடங்கள் மல்லாகம் சதா சகாய அன்னை ஆலயத்தில் நடைபெறவுள்ளன. (203)

கல்வி நிறுவகத்தின் கலந்துரையாடல்

தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வி டிப்ளோமா கற்றை நெறியில் 2ஆம் வருட பரீட்சைக்குத் தோற்றவுள்ள சகல ஆசிரியர்களுக்குமான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரியில் இயங்கும் நிலையத்தில் நடைபெறவுள்ளது என சிரேஷ்ட விரிவுடிரயாளரும் பிராந்திய இணைப்பாளருமாகிய திருமதி த.வில்நாதன் தெரிவித்துள்ளார்.

தவறவிட்ட பணத்தை பெறுமாறு கோரிக்கை

தென்மராட்சி,டிசெ.2

தென்மராட்சி பிரதேச செயலக வளவில் கடந்த மாதம் கண் டெடுக்கப்பட்ட ஒரு தொகைப் பணம் பிரதேச செயலக நிர்வாக உத்தி யோகத்தரிடம் கைய ளிக்கப்பட் டுள்ளது.

பணத்தினைத் தவறவிட்டவர் ஆதாரங் காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தெரிவித்துள்ளார். (203)

மூத்த இடதுசாரித் தலைவர் 89ஆவது வயதில் காலமானார்

கொழும்பு,டிசெ.2

ஒரு காலத்தில் இலங்கை அரசியலில் இடதுசாரி இயக்கங்களின் முன்னோடிகளில் ஒருவராகத் திகழ்ந்தவரான சம்ளி குணவர்த்தன கடந்த மாதம் 25 ஆம் திகதி தமது 89 ஆவது வயதில் காலமானார். இலங்கை நாடாளுமன்றம் ஆரம்பமான 1947ஆம் ஆண்டிலிருந்து அரசியலில் ஈடுபட்டுவந்துள்ளவர்களில் நீண்டகாலம் உயிர் வாழ்ந்துள்ள அரசியல்வாதி இவர் ஆவார்.

1964ஆம் ஆண்டு செய்தித் தொடர்புகள் அமைச்சராகவும் பதவி வகித்துள்ளார். இலங்கை சமசமாஜக் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவராகவிருந்த சம்ளி குணவர்த்தன களுத்துறைத் தேர்தல் தொகுதியின் பிரதிநிதியாக பல காலம் தொடர்ந்து பதவி வகித்துள்ளார். அவரது இறுதிக்கிரியைகள் களுத்துறையில் இடம்பெற்றன. (ப)

நூல்வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,டிசெ.2

'சிவநவோத்தர சஹஸ்ர சங்க பூஜாக்ரமம்' என்னும் நூலின் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு [illegible] [illegible] மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (202)

பண்டிதர் பரீட்சைகள்

யாழ்ப்பாணம்,டிசெ.2

யாழ்.ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தால் எதிர்வரும் 16ஆம் திகதி தொடக்கம் 5 தினங்கள் பண்டித, பால பண்டித பிரவேச பரீட்சைகள் நடத்தப்படவுள்ளன.

பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான வழிகாட்டல் வகுப்புகளும், புதிய வகுப்புகளும் வண்ணை நாவலர் ம.வியில் நடைபெறவுள்ளன.

வகுப்புகளில் கலந்துகொள்ள விரும்புவோர் நாவலர் ம.வி . அதிபருடன் அல்லது சைவப்புலவர் சு.செல்லத்துரையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (202)

கலச அபிஷேகம்

யாழ்ப்பாணம், டிசெ.2

காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் ஐயனார் - நடராஜன் புதிய தேர்முட்டி சாந்திப் பெருவிழாவும் கலச அபிஷேகமும் நாளை ஞாயிற்றுக்கிழமை 8 மணி முதல் நடைபெறவுள்ளன.

மூலமூர்த்திகளுக்கு அபிஷேகம் நடைபெற்று அதனைத் தொடர்ந்து புதிய தேர்முட்டிகளுக்கு சாந்தியும் கலசஅபிஷேகமும் நடைபெறவுள்ளன. (203)

தகுதியானோர் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,டிசெ.2

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் கீழ் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் தேசிய சான்றிதழ் பெறுவதற்கான பயிற்சி நெறிக்கு யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை, வவுனியா போன்ற பயிற்சி நிலையங்களிற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆறு மாத முழுநேரப் பயிற்சிநெறிக்கு ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் ஆங்கிலம்,கணிதம் ஆகிய பாடங்களில் சாதாரண சித்தி பெற்றிருப்போர் ஏனைய 4 பாடங்களில் திறமைச் சித்தியைப் பெற்றிருக்கவேண்டும் அல்லது ஆங்கிலம், கணிதம் ஆகிய பாடங்களில் திறமைச்சித்தியும் இரு தடவைகளுக்கு மேற்படாது 6 பாடங்களில் சித்தியும் பெற்றிருப்பதுடன் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் ஏதேனும் இரண்டு பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரி விண்ணப்பமுடிவு திகதியன்று 16 தொடக்கம் 35 வயதிற்கு உட்பட்வராக இருக்கவேண்டும்.

தகுதியுடையவர்கள் முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித்தகைமைகள் பயில விரும்பும் பயிற்சி நிலையம் என்பவற்றைக் குறிப்பிட்டுச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 'மாகாணப் பணிப்பாளர், தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை, இல.7 கோயில் வீதி, யாழ்ப்பாணம்' என்னும் முகவரிக்கு எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (203)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

திருமதி சண்முகன் ஞானம்பாள்

தோற்றம் 12.11.1959 — மறைவு 02.11.2006

கைதடி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட எமது அன்புத் தாயின் மறைவுச் செய்தி கேட்டு இறுதிச் சடங்குகளில் கலந்துகொண்டவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவியவர்களுக்கும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இன்று(02.12.2006) நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கைதடி தெற்கு,
பிள்ளையார் கோயில் வீதி, கைதடி

குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்

ஞானப்பிரகாசம் தேவசகாயம்

இளவாலையைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் தேவசகாயம் நேற்று (01.12.2006) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பௌலினம்மாவின் அன்புக் கணவரும் செல்பின் மரினா(மலர்), கில்பேட் யோகராசா (பருத்தித்துறை துறைமுகம்), றூபினா(சுவிஸ்), சுதா(ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆர்.ஜேசுதாசன்(கிராம அலுவலர், திருநெல்வேலி), பரா, சிறிகாந்தா (சுவிஸ்), அன்ரன் ராதா (ஜேர்மனி), சித்தி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தற்போதைய இல்லத்தில் இருந்து காலை 8.30 மணியளவில் இன்று(02.12.2006) சனிக்கிழமை இளவாலையில் அவரின் இல்லத்திற்குக் கொண்டு செல்லப்படும். முற்பகல் 10.30 மணிக்கு இளவாலை புனித அன்னாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, இளவாலை அன்னாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆர்.ஜேசுதாசன்
(மருமகன் - கிராம அலுவலர், திருநெல்வேலி).

T.C. லேன்,
சுதுமாலை மேற்கு,
மானிப்பாய்.

(55871)

மரண அறிவித்தல்கள்

இரங்கநாதன் பிரபாசங்கர்(குஞ்சுபபி)



உசன் ,மிருசுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட இரங்கநாதன் பிரபாசங்கர் 30.11.2006 வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் சுபாங்கினியின் அன்புக் கணவரும் டிதுஷன், மிருஷா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை இரங்கநாதன் - இரங்கநாதன் இராசபூபதி தம்பதியரின் அன்பு மகனும் விடத்தற்பளை சுப்பிரமணியம் - நகுலாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகனும் திருமதி சிதம்பரப்பிள்ளை சிதம்பரத்தின் அன்புப் பேரனும் இரவிசங்கர், ஜெயசங்கர்(கனடா), இரவிச்சந்திரிக்கா, சிவசங்கர்(சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயராணி, சசிகலா(கனடா), இராஜேந்திரா(யாழ்.செயலகம்), பகீரதி(சுவிஸ்), கணேசதாஸ் (சுவிஸ்), முருகதாஸ் (கனடா), சுமதி - ஸ்ரீதரன் (இத்தாலி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 02.12.2006, 03.12.2006 இரு தினங்களும் பொறளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 03.12.2006 ஞாயிறு பிற்பகல் 4 மணிக்கு பொறளை கனத்தை மயானத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெறும்.

தொ.பே. : 011 2434027

தகவல்:
கு.இராஜேந்திரா (மைத்துனர்)

(55877)

செல்வி சரஸ்வதி சின்னத்தம்பி

(ஓய்வுபெற்ற ஆசிரியை- பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி)

வேலணையைப் பிறப்பிடமாகவும் கொட்டாஞ்சேனையை வதிவிடமாகவும் கொண்ட செல்வி சரஸ்வதி சின்னத்தம்பி கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அக்குரஸ வர்த்தகர் சின்னதம்பி - ஆச்சிமுத்து தம்பதியரின் இளைய மகளும் காலஞ்சென்ற ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி நாகரத்தினம் பொன்னுத்துரை, தங்கம்மா நாகராசா ஆகியோரின் சகோதரியும் காஞ்சென்ற ஓய்வுபெற்ற அதிபர்கள் பண்டிதர் அ.பொன்னுத்துரை, இ.நாகராசா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் 30.11.2006 இல் நடைபெற்றது என்பதை அறியத்தருகிறோம்.

தகவல்:
பேராசிரியர்
பொ.பாலசுந்தரம்பிள்ளை
(பெறாமகன்).

(55878)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 01 ★ 04 ★ 1918



மறைவு 05 ★ 11 ★ 2006

அமரர் **நாகமுத்து வேலுப்பிள்ளை**

எமது குடும்பத்தலைவரின் அந்தியேட்டிக்கிரியைகள் (05.12.2006) செவ்வாய்க்கிழமை காலை 5 மணிக்கும், அதனைத் தொடர்ந்து நண்பகல் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.)

பழையதோட்டம், கம்பர் மலை, உடுப்பிட்டி வடக்கு. (55779)

தகவல்: **குடும்பத்தினர்.**

மூன்றாம் ஆண்டின் முடிவில்லா நினைவுகள்

திருமதி

கார்த்திகேசு சின்னமணி

திதி: பூர்வபக்க திரயோதசி
02.12.2006 சனிக்கிழமை

மண் மகிழ 05★03★1933

கண் நெகிழ 06★12★2003

ஈரைந்து மாதங்கள் கருவறையில் சுமந்து
எழுவர் எமைப் பெற்றெடுத்து
களிப்புடனே வளர்த்து, கருத்துடனே
கல்விதனைத் தந்து, அக்கல்விச் செல்வத்தால்
சென்ற இடமெல்லாம் சிறப்புடன்
வாழ வைத்த எங்கள் அன்னை
தீர்க்க சுமங்கலியாய் சென்று மூன்றாண்டுகள்,
நீங்கா நினைவுடன் நித்தமும் உருகி நிற்கின்றோம்.
அம்மா நீங்கள் ஸ்ரீ முருகன் திருப்பாதங்களில்
உறைந்துள்ளீர்கள் என உணர்கின்றோம்.

"செல்விவளவு"
இமையாணன்,
உடுப்பிட்டி. (கஜ)

தங்கள் நினைவோடு வாழும்,
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

முதலாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் முகிழ்ப்பு 01 ★ 01 ★ 1933

விண்ணில் கலப்பு 12 ★ 12 ★ 2005

அமரர் **தவசிப்பிள்ளை வேலுப்பிள்ளை**

திதி: துவாதசி

அன்போடும் பாசத்தோடும் எமை
வளர்த்து எமக்காக வாழ்ந்து எம்மையெல்லாம்
சிறக்கச் செய்த ஐயா தினந்தினம் நினைந்துருகியே
வாடுகின்றோம் ஐய
ஆண்டொன்று அவசரமாய்த்தான் ஓடியதா
ஆற முடியவில்லையே ஐயா
நின் ஆத்ம சாந்திக்காக நிதமும் நாம் இறைவனிடம்
இறைஞ்சுகின்றோம்.

ஞானவைரவர் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய். (55853)

பிரிவால் துயருறும்,
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

COMPUTER EXPRESS
Institute of Information Technology
இல. 15, சிறாம்பியடி வீதி, யாழ்ப்பாணம். (off Stanly Rd.)
021-222 8250, 0777-222422

ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

Diploma in Hardware Engineering
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault Finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking Etc..
Course Fee :2000/=

Diploma in Computerized Accounting
ACCPAC + Quick Books Premier + MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்.
Course Fee :3500/=

Diploma in Video Mixing
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter.
Course Fee :3000/=

Diploma in Graphic Designing
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Corel Draw ❖ Cool3D Studio ❖ Micro media Flash MX
Course Fee :2000/=

ஒரே நாளில் ஆரம்பம்:- 04/12/2006- 08.00

ஏனைய அனைத்து கற்கைநெறிகளிற்கான புதிய பிரிவுகள் 01/12/2006, 02/12/2006, 03/12/2006, 06/12/2006 ஆகிய திகதிகளில் ஆரம்பமாகின்றது.

சைவ சமயப் பரீட்சை

காரைநகர் மணிவாசகர் சபை பாடசாலை மாணவர்களிடையே நடத்தும் சைவ சமயப் பரீட்சை நாளை தரம்3 தொடக்கம் 10 வரையான மாணவர்களுக்கு இப் பரீட்சை இடம் பெறும் எனவும் தரம் 11 மாணவர்களுக்கு பரீட்சை நடத்தப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(203-73)

ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்

எமது கல்லூரி பழைய மாணவர் சங்கப் பொருளாளரும் கல்லூரி வளர்ச்சியில் அரும்பணியாற்றியவருமாகிய

அமரர் **கியூபேட் ஆனந்தராஜன்**

(கிராம அலுவலர் - குருநகர் J/70)

அவர்களின் மறைவு குறித்து துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 21.11.1958 உதிர்வு 01.11.2006

அமரர்

தம்பிப்பிள்ளை அற்புதராணி

(முகவரி - ஆலடி விதி, மட்டுவில் கிழக்கு
சாவகச்சேரி - கனகம்புளியடிச் சந்தி)
வதிவிடம்: கிருலப்பனை, கொழும்பு.

அன்புக்கு இலக்கணமாய்
எனக்காகவே வாழ்ந்த -
என் அம்மாவே
எனைவிட்டுத் தனியே
நீ எங்கு சென்றாலும் -
உம் நினைவுகள்
என்றென்றும்
எனைவிட்டு நீங்காதம்மா

தகவல்: K.N நிஷானன் (மகன்)
077-6724472

வேலணை பிரதேச சபை கேள்வி அறிவித்தல்

உதயன் பத்திரிகையில் 24.11.2006 வந்த விளம்பரத்தில் (தம்பனை வீதி, மணியகாரன் வீதி, தொழிலாளர்புரம் வீதி) புதிய திகதியின் பிரகாரம் கேள்வி அறிவிப்பு இடம்பெறும்.

- படிவங்கள் வழங்கும் இறுதித் திகதி 07.12.2006
- 09.12.2006இற்கு முன் காலை 10 மணிக்கு முதல் சமர்ப்பிக்க வேண்டும். அன்றைய தினமே பி.ப. ஒரு மணிக்கு கேள்விகள் திறக்கப்படும்.

மேலதிக விவரம் தலைமையகத்துடன் தொடர்புகொள்ளவும்.

கைலாசபிள்ளை மகேந்திரலிங்கம்
பிரதேச சபை, வேலணை. (சி-51421)

விழிநீர் சொரிந்த இதய அஞ்சலிகள்

4ஆம் ஆண்டு

அமரர் **சி.இராசையா**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)
தோற்றம்: 06.10.1919
மறைவு : 17.11.2002
திதி: பூர்வபட்ஷ துவாதசி

15ஆம் ஆண்டு

இராசசிரோன்மணி இராசையா
தோற்றம்: 23.07.1936
மறைவு : 24.07.1991
திதி: பூர்வபட்ஷ திரயோதசி

ஆண்டுகள் பல சென்றாலும் ஆறுமா? எம் நெஞ்சம் நடந்து வந்த பாதையில் மறையுமா உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சம் நிறைந்த அன்புத் தெய்வங்களே என்றும் அழியா உங்கள் நினைவுகளுடன்.

"அம்பாள் அகம்"
சரசாலை மத்தி, சாவகச்சேரி.

அன்பு
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 07 . 04 . 1928

உதிர்வு 02 . 11 . 2006

அமரர் **கந்தையா பொன்னம்மா**

எமை மறந்து அம்மா நீ எங்கேதான் போனாயோ?
நினைவிழந்து துடிக்கின்றோம் மீண்டுவர மாட்டாயா?
மாதம் ஒன்றென்ன ஓராயிரம் ஆண்டானாலும்
உம் நினைவு எம் மனதில் என்றென்றும் நீங்காது
உங்கள் ஆத்மா சாந்தியடைய
ஆண்டவனை வேண்டுகிறோம்.

கொட்டியன் சீமா
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

- குடும்பத்தினர்.

31ஆம் நாள் நினைவஞ்சலி 19ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 18.11.1921 மறைவு 02.11.2006

செல்லையா இராசம்மா

பத்து மாதம் சுமந்து பெற்ற பாசமுள்ள
அம்மாவே!
விரைந்து விட்ட விதியதனால் விண்ணுலகம்
சென்றீரோ?
உறுதியை இழந்துவிட்டோம், உரிமை
சொல்ல யாருமில்லை
தந்தை போல இருந்துவிட்டு தவிக்கவிட்டு
சென்றீரோ?
மனம் உருகி அழுகின்றோம் - உங்கள்
எழில் முகம் காண்பதற்கு
மானிப்பாய்.

தோற்றம் 28.02.1909 மறைவு 14.11.1987

நாகமுத்து செல்லையா

பத்தொன்பது ஆண்டுகள் ஓடி
மறைந்தாலும்
பாசமுள்ள எங்கள் அப்புவே!
நேசமுடன் தேடுகின்றோம் - உங்கள்
நீண்ட பிரிவதனில்
வாஞ்சையுடன் மலர் தூவிப்
பணிகின்றோம் உங்கள் பாதமதில்.

குடும்பத்தினர்
(மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல்: 222 9933, 222 3837 - 222 9944

திருந்த இனிமேலும் மனம் வருமா?

கிழக்கில், மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வாகரைப் பிரதேசத்தை, பல வாரங்களுக்குப் பிறகு கடந்த புதன் கிழமையே உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் சென்றடைந்தன. அவையும் அரசாங்கத்தின் பொருள்கள் அல்ல. ஐக்கிய நாடுகள் சபையின் உதவி நிறுவனங்களால் அன்பளிக்கப்பட்டவை.

வாகரைப் பிரதேசம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள ஒரு பகுதி. அண்மைக் காலமாக இப்பிரதேசத்திலும், அதனை அண்டியுள்ள - அதனைச் சூழவுள்ள - பகுதிகளிலும் இராணுவ மோதல்கள் விட்டுவிட்டு நடைபெற்றன.

வாகரையில் ஏற்கனவே வசித்த மக்களைவிட, மோதல்களால் ஏனைய இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து ஆயிரக்கணக்கான மக்கள் அங்கு சென்று தஞ்சமடைந்திருந்தனர்.

மொத்தத்தில் மோதல்களால் தமது சொந்த இருப்பிடங்களை விட்டு, உயிரைப் பாதுகாக்கும் ஒரே - முதன்மை - நோக்கத்துடன் அங்கு சென்ற மக்களே அவர்கள். கையில் கிடைத்த பொருள்களுடன் ஓடியவர்கள். உயிர் தப்பினால் போதும் என்று ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் இடம்பெயர்ந்தவர்கள்; ஏதிலிகள் ஆனவர்கள்.

இலங்கையின் சகல பகுதிகளிலும் வாழும் மக்களின் தேவைகளையும் நலன்களையும் இன, மத, பிரதேச வேறுபாடின்றி நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு, மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தையே முழுக்க முழுக்கச் சார்ந்துள்ளது. அதுவே சனநாயகப் பண்பு. தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அந்தப் பண்பின் விலை என்ன என்று கேட்கும் நிலை எப்போதோ உண்டாகிவிட்டது என்பது எல்லோரும் அறிந்ததே.

வாகரையிலும் அரசாங்கம் அந்தப் பொறுப்பினைத் தட்டிக் கழித்தது; நிறைவேற்றுவதற்குப் பின்வாங்கியது. இடம்பெயர்ந்த மக்களுக்குரிய பொருள்களை அரச தரப்பு எடுத்துச் செல்ல முயன்றபோதெல்லாம், விடுதலைப் புலிகள் தாக்குதல்களை நடத்தி அதற்குக் குந்தகம் விளைவித்து தடுத்து விடுகின்றனர் என்று குற்றஞ்சாட்டி வந்தது.

அரசு எடுத்துச் செல்லும் பொருள்களை தடுத்துநிறுத்தும் விதத்தில் தாமே செயற்பட்டுக் கொண்டு, சர்வதேசத்திற்கு அரசைக் கொடுமைக்காரன் என்று காட்டி, அதனைப் பிரசாரம் செய்வதே விடுதலைப் புலிகளின் நோக்கம் என்றும் அரசு கூறிவந்தது. தன்னை நல்ல பிள்ளையாக - மக்களுக்கு உதவுவதில் முதன்மையாளன் - என்று வேடம் போட்டுக் கொண்டிருந்தது.

அரசாங்கம் இது விடயத்தில் அக்கறையுடனும், உள்ளார்வத்துடனும், இதய சுத்தியுடனும் செயற்படவில்லை என்பது பல தரப்புகளுக்கும் தெரிந்ததே.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிட விழைந்த, முன்வந்த தொண்டர் அமைப்புகளுக்கும், அவை தமது மனிதாபிமானப் பணியைச் செய்வதற்கு அரச தரப்பில் இருந்து போதிய ஆதரவும் ஊக்குவிப்பும் இல்லை என்பதை நாம் சொல்லித் தெரியவேண்டியதில்லை.

உலக உணவுத் திட்டம், வேர்ள்ட் விஷன், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் உட்படப் பல தொண்டு நிறுவனங்கள் விடாமுயற்சியுடன் செயற்பட்டதன் விளைவாகவே, புதன்கிழமையேனும் வாகரை மற்றும் கதிரவெளிமக்களுக்கு உதவிப் பொருள்கள் கிடைத்தன. இது தொடர்பில், சம்பந்தப்பட்ட சகல தொண்டு நிறுவனங்களினதும் சேவை மனித்துவம் நிறைந்தது.

கிழக்கில் வாகரை என்றால் என்ன, வடக்கில் குடாநாடு என்றால் என்ன, அங்கு மனிதாபிமானப் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கக் கூடாது என்பதில் அரசு மனதார விருப்பம் கொண்டிருந்தால், இத்தகைய பிரச்சினைகளும், சிக்கல்களும் தோன்றியிருக்கவேமாட்டா.

வடக்கிலும் கிழக்கிலும் மனிதப் பேரவலங்களும் மனிதாபிமானப் பிரச்சினைகளும் உருவாகக்கூடாது என்பதில் அரசுக்கு உண்மையான அக்கறை இருந்திருக்குமாயின் சர்வதேசம் அதற்கு புத்திமதி கூறுவதற்கு இடமிருந்திருக்காது.

விடுதலைப் புலிகள் மீது குற்றச்சாட்டை சுமத்திக் கொண்டு, தமிழ் மக்களைப் பட்டினி போடுவது உட்படப் பல மனிதாபிமானமற்ற நடத்தையிலும் மனித உரிமை மீறல்களையும் இலங்கை அரசு செய்வதை உலகம் அறிந்துள்ளது.

கம்போடிய நாட்டின் பிரதமர் ஹுன்சென், இலங்கைப் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவுக்கு அறிவுரை கூறும் அளவுக்கு, இலங்கை அரசின் உண்மை வடிவம் - பொட்டுக் கேடு - சர்வதேசத்துக்குப் புலப்பட்டிருக்கிறது.

கம்போடியாவும் பல வருடங்களாக உள்நாட்டுப் போரை எதிர்நோக்கிய நாடு. அதன் பின்னரே அங்கு ஜனநாயக ஆட்சி தோன்றியது. அந்த நாட்டின் பிரதமர், இலங்கைப் பிரதமரிடம் பின்வருமாறு கூறியிருக்கிறார்:

இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் நடைபெறும் மோதல்கள் காரணமாக அப்பாவிப் பொதுமக்களுக்கான மனிதாபிமான உதவிகள் சென்றடைவதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். சர்வதேச தொண்டு அமைப்புகள் மற்றும் மனிதாபிமான நிறுவனங்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் செல்வதற்குக் கதவுகள் திறக்கப்பட வேண்டும். அவ்வாறான முன்னோடி ஏற்பாடுகளுக்கு உத்தரவாதம் வழங்கினால் மட்டுமே அந்த மக்களுக்கான உதவிகள் உரிய வேளையில், உரிய அளவில் கிடைப்பதற்கு வழிபிறக்கும் - இவ்வாறு அவரின் புத்திமதி அமைந்திருக்கிறது.

அதற்கான வேண்டுகோளை இலங்கை அரசாங்கத்திடம் மட்டுமன்றி விடுதலைப் புலிகளிடமும் கம்போடியப் பிரதமர் விடுத்திருக்கிறார்.

இலங்கையின் பிரதமர், வெளிநாடு ஒன்றுக்குச் சென்று அந்நாட்டுப் பிரதமரை நேரில் சந்திக்கும்போது, மனிதாபிமானம் காக்கவேண்டும் என்று புத்திமதி கூறுவது அரசுக்கும் பெரும் தலைகுனிவே!

முந்திய காலங்களைப் போன்று இக்காலத்தில் உண்மையை மறைத்துவிடுவது இலகுவானதல்ல. முன்னர் எல்லாம் காலந்தாழ்தியே உண்மை வெளிவரும் - சிலவேளைகளில் - மிக நீண்ட காலமும் செல்லும். ஆனால் தகவல் தொழில்நுட்பமும் ஊடகத்துறையும் நினைத்துப்பார்க்கமுடியாத அளவுக்கு விரைந்து வளர்ந்து வரும் இக்காலத்தில், உண்மை உடனேயே அம்பலத்துக்கு வந்துவிடுகிறது.

பூனை கண்ணை மூடிக்கொண்டால் பூலோகம் இருண்டுவிட்டது என்ற அர்த்தமா?

உண்மை உடனுக்குடன் வெளியே வந்துவிடும் என்பதனை உணர்ந்துகொண்டாவது, தனது பொய்யான பரப்புரைகள் விரைவில் கரைந்துவிடும் என்பது தெரிந்தாவது இலங்கை அரசு, மனிதாபிமானப் பிரச்சினைகள், மனித உரிமை மீறல்கள் தொடர்புடைய விவகாரங்களிலேனும் திருந்திக்கொள்ளுமா?

பண்ணையில் போதிய வசதியில்லை; பஸ் ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.2

நகரப்பகுதி பஸ் நிலையத்தை திடீரெனப் போதிய வசதிகள் அற்ற பண்ணைப் பகுதிக்கு மாற்றியமையால் போக்குவரத்துச் சபை யாழ். சாலை ஊழியர்கள் நேற்றுப் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

எனினும், அத்தியாவசிய தேவைகளைக் கருத்திற்கொண்டு பாடசாலைச் சேவைகள் உட்பட ஒருசில சேவைகள் நடத்தப்பட்டன.

பண்ணை பஸ் நிலையத்தில் பஸ்களை நிறுத்துவதற்கு போதிய இட வசதிகள் எதுவும் இல்லை.

அத்துடன், நிர்வாக வேலைகள் செய்யக்கூடிய வசதிகள், பஸ்கள் பழுதடைந்தால் திருத்துவதற்கான இடவசதி, எரிபொருள் நிரப்புவதற்கான வசதி போன்றன பண்ணை பஸ் நிலையத்தில் இல்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நிர்வாகச் செயற்பாடுகளை உரிய முறையில் செயற்படுத்தக்கூடியதாகவும் பஸ் வண்டிகளை உரியமுறையில் நிறுத்தக்கூடியதாகவும் வசதிகள் ஏற்படுத்தும் பட்சத்தில் வழமைபோன்று சேவையை நடத்வதற்குத் தாம் தயாராக உள்ளதாக போக்குவரத்துச்சபையினர் தெரிவித்துள்ளனர்.

பண்ணையில் நூறிற்கும் அதிகமான பஸ்களை நிறுத்தமுடியாது வீதிகளிலேயே நிறுத்தவேண்டிவரும். இதனால் அப்பகுதியில் இடநெருக்கடி ஏற்படும் நிலைமை தோன்றும்.

யாழ். சாலையில் இருந்து பாடசாலை சேவைக்காக 34 பஸ்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் பருத்தித்துறை, காரைநகர் சாலைகளைச் சேர்ந்த 50 வரையான பஸ்கள் சேவையில் ஈடுபடுகின்றன என யாழ். பஸ் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

(203-11-88)

பருகொலைகள்

ஓட்டுமடத்தில்....

யாழ்ப்பாணம்,டிசெ.2

அராலி வீதி, ஓட்டுமடம் பகுதியில் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் குடும்பப்பெண் ஒருவர் இனந்தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அதே இடத்தைச் சேர்ந்த தேவதாசன் விமலா (வயது 53) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

வீட்டில் இருந்த அவரை வெளியே அழைத்த ஆயுததாரிகள் சுட்டனர் என்றும் -

காயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு அங்கு மரணமானார் என்றும் - விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

யாழ். பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு விசாரணைகளை நடத்தி, பிரேத பரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி உத்தரவிட்டார். (1)

மட்டுவிலில்....

யாழ்ப்பாணம்,டிசெ.2

மட்டுவில் தெற்கில் நேற்றுமுன்தினம் இரவு இளைஞர்ஒருவர் இனந்தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அதே இடத்தைச் சேர்ந்த ஜெயக்குமார் திலீபன் (வயது 24) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

இறந்தவரின் வீட்டுக்குச் சென்ற இனந்தெரியாத நபர்கள், அவரை வெளியே அழைத்துச் சுட்டுவிட்டுத் தப்பினர் என விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. (1)

தொண்டு நிறுவன ஊழியரின் வீடு மீது கிரனேட் வீச்சு!

கல்முனையில் முஸ்லிம் தொண்டு நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் ஊழியர் ஒருவரின் வீட்டுக்கு கைக்குண்டு வீசப்பட்டிருக்கிறது.

கல்முனை, சாய்ந்தமருது ஒஸ்மன் வீதியில் வசிக்கும் தொண்டர் நிறுவன உத்தியோகஸ்தர் ஒருவரின் வீட்டின்மீது நேற்று அதிகாலை இரண்டு மணியளவில் இனந்தெரியாதோர் கைக்குண்டு ஒன்றை வீசிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர் - என்று கூறப்படுகிறது.

முஸ்லிம் சம்மேளன கலாசார அபிவிருத்தி நிறுவனத்தில் பணிபுரியும் சம்பந்தப்பட்ட உத்தியோகஸ்தர் வீட்டில் ஆழ்ந்த நித்திரையில் இருந்தவேளையில் கைக்குண்டு வீசப்பட்டுள்ளது. வீட்டு முற்றத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் பலத்த சேதத்துக்குள்ளாகியுள்ளது. கல்முனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

கூட்டம் இடமாற்றம்

நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவிருந்த பரீட்சை அறிவுறுத்தல் கூட்டம் அன்றைய தினம் 9.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும் என்று யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் வே.செல்வரத்தினம் தெரிவித்துள்ளார்.

வெளிமாவட்ட பல்கலைக்கழக தெரிவுக்கு யாழ்ப்பாணத்தில் தகுதிகாண் பரீட்சை

இன்று ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம்,நவ.2

மொறட்டுவ மற்றும் கொழும்பு பல்கலைக்கழகங்கள், கணனிக் கல்லூரிகளில் பாடநெறிகளைத் தொடர்வதற்கு மாணவர்களைத் தெரிவதற்கான தகுதிகாண் பரீட்சைக்கு விண்ணப்பித்த யாழ்ப்பாண குடாநாட்டு மாணவர்கள் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான பீடத்தால் நடத்தப்படவிருக்கும் தகுதிகாண் பரீட்சைகளில் தோற்றமுடியும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் ஆர்.குமாரவடிவேல் அறிவித்துள்ளார்.

மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் பி.எஸ்.ஸி தகவல் தொழில்நுட்பத் துறைக்கு விண்ணப்பித்தவர்கள் இன்று மு.ப. 10 மணிமுதல் 11 மணிவரை நடைபெறும் தகுதிகாண் பரீட்சையிலும் -

பிடிசைன்(படைவை - உடைகள்) இன்று பி.ப. 1 மணிமுதல் 4 மணிவரையிலும்-

பி.எஸ்.ஸி. (பில்ற் என்விரோன்மன்ட்) மாணவர்கள் 9ஆம் திகதி மு.ப. 9 மணிமுதல் 12 மணிவரையும் பி.டிசைன் (ஆக்கிடெக்ஷர்) 9ஆம் திகதி பி.ப. 2.30 மணியிலிருந்து 4.30 மணிவரையிலும் - யு.ஸி.எஸ்.ஸி. கல்லூரியில் பி.ஐ.சி.ரி. பாடத்துக்குத் தோற்றும் மாணவர்கள் 10ஆம் திகதி மு.ப. 10 மணியிலிருந்து 11.15 மணிவரையிலும் நடைபெறும் தகுதிகாண் பரீட்சையிலும் தோற்றலாம்.

கொழும்பு மற்றும் வவுனியாவை பரீட்சை நிலையங்களாக தமது BICT பாடநெறிக்கான விண்ணப்பத்தில் தெரிவித்திருப்பவர்களும் யாழ்ப்பாணத் தில் பரீட்சைக்குத் தோற்றலாம். இம் மாணவர்கள் இம்மாதம் 5ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்பதாக யாழ். பல்கலைக் கழக பரீட்சைப் பிரிவில் தோன்றி விவரங்களைக் கொடுக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். பரீட்சை தொடங்குவதற்கு 45 நிமிடங்களுக்கு முன்னரே மண்டபத்திற்கு வருகைதரவேண்டுமென்றும் கேட்கப்பட்டுள்ளது. (ப)

கழுத்து வெட்டப்பட்ட நிலையில் மெலிஞ்சிமுனையில் இளைஞனின் சடலம்

யாழ்ப்பாணம்,டிசெ.2

ஊர்காவற்றுறை, மெலிஞ்சிமுனைப் பகுதியில் நேற்றுக்காலை கழுத்து வெட்டப்பட்ட நிலையில் இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நாரந்தனை வடக்கைச் சேர்ந்த டானியல் குயின்ரன் (வயது 24) என்னும் ஒரு பிள்ளையின் தந்தையின் சடலமே அது என இனங்காணப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்கப் பணியாளரான அவர் வியாழக்கிழமை பிற்பகல் தொடக்கம் காணாமற்போயிருந்தார். நேற்றுக்காலை மெலிஞ்சிமுனை அன்னை வேளாங்கன்னி ஆலயத்திற்கு அருகில் கழுத்து வெட்டப்பட்ட நிலையில் அவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது.

அவர் கூடவே வைத்திருந்த அடையாள அட்டை, பேர்ஸ் என்பவை அவரது சடலத்துடன் காணப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(1-202-16)

அக்கரைப்பற்று விநாயகபுரத்தில் அதிகாலை மூவர் சுட்டுக் கொலை!

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிலுள்ள விநாயகபுரத்தில் இனந்தெரியாத துப்பாக்கி நபர்களினால் மூவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

விநாயகபுரத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சந்தரலிங்கம் (வயது -42), மயில்வாகனம் அருளானந்தம் (வயது-26), தெய்வநாயகம் கவீந்திரன் (வயது-26) ஆகியோரே கொல்லப்பட்டவர்களாவர்.

இச்சம்பவம் நேற்று அதிகாலையில் நடைபெற்றுள்ளது.

கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்றத்துக்குக் கொண்டு வரப்பட்டு விசாரணைகள் நடைபெற்றன.

மாவட்ட நீதிவான் ரீ.எல். மனாப், மரணவிசாரணைகளின்போது சமூகமளித்து கொல்லப்பட்டவர்களின் உறவினர்களிடம் இருந்து வாக்குமூலத்தைப் பெற்றார்.

அக்கரைப்பற்று உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ.பி. தயாரத்ன உட்பட மற்றும் பல அதிகாரிகளும் விசாரணையில் கலந்துகொண்டனர். (ஐ)

நாளை

கார்த்திகை 17
ஞாயிற்றுக்கிழமை
03.12.2006
திதி : திரயோதசி
முற்பகல் : 09.52
நட்சத்திரம் : பரணி
பிற்பகல் : 04.42
[illegible]

பயிற்சிவகுப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.2

கரித்தாஸ் கிபூடெக் நிறுவனத்தின் தேசிய உயிர்ப்பூட்டல் செயற்றிட்டத்தின் கீழ் அனர்த்தகாலத்தில் இழந்த கல்வியை மீட்டலுக்கான பயிற்சி வகுப்பு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் தெல்லிப்பழை சைவப் பிரகாச வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சியில் தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாலயம், குளமங்கால் றோ.த.வித்தியாலயம், காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி, கட்டுவன் புலம் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் மாணவர்களும் தெல்லிப்பழை இளந்தளிர், தெல்லிப்பழை திருவள்ளுவர் ஆகிய உயிர்ப்பூட்டல் கழகங்களின் மாணவர் களும் கலந்து கொள்வர். (202)

கடற்படைத்தளத்தில் ஒத்திகை; பெண் ஒருவர் வேட்டுக்கு காயம்

ஊர்காவற்றுறை,டிசெ.2

ஊர்காவற்றுறை கடற்படைத் தளத்தில் நேற்றுமுன்தினம் மாலை ஒத்திகை நடவடிக்கை இடம்பெற்றது. இதில் சிக்கி குடும்பப் பெண் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

ஊர்காவற்றுறை முகாம் வீதியைச் சேர்ந்த யோகன் திருவருட்செல்வி (வயது 31) என்பவரே தலையில் காயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலையில் ஊர்காவற்றுறைக் கடற்படையினர் கடற்படைத் தளத்தில் பெரியளவிலான படை நடவடிக்கை ஒத்திகையை மேற்கொண்டனர். இதன்போது பரவலாக வேட்டுகள் தீர்க்கப்பட்டன. இதனால் கரைமோரத்தில் பல வீடுகளின் கூரைகள் சேதமடைந்தன. (202-16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தோனேசியாவில் பூகம்பம்

ஜகார்த்தா, டிசெ.2

இந்தோனேசியாவின் சும்பாவ மாநிலத்தில் நேற்று சக்திவாய்ந்த பூகம்பம் வெடித்தது. அதன் பருமன் 6.3 றிச்டர்ஆக இருந்ததாக அமெரிக்க பூகர்ப்பவியல் நிலையம் அறிவித்தது.

இந்தப் பூகம்பத்தின் விளைவாக 25 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள கட்டடங்களில் வெடிப்புகள் ஏற்பட்டதாக இந்தோனேசியாவின் வளிமண்டல நிலையம் அறிவித்தது.

சும்பாவ மாநிலத்தில் றபா என்ற நகரத்தில் இருந்து 25 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள கடற்பரப்பில் கடற் படுகைக்கு அடியில் 45 கிலோமீற்றர் ஆழத்தில் உண்டான அதிர்வினாலேயே மேற்படி பூகம்பம் உண்டானதாக அமெரிக்க பூகர்ப்பவியல் நிலையம் அறிவித்தது.

பூகம்பத்தின் அதிர்வுகள் அது உருவாகிய இடத்தில் இருந்து 400 கிலோமீற்றர் தொலைவில் உள்ள சுல்வெஸி என்ற தீவின் மக்காசார் பகுதியிலும் உணரப்பட்டது.

மேற்குறிப்பிட்ட பூகம்பம் ஏற்படுவதற்கு ஒருசில மணிநேரத்திற்கு முன்னர் 6.6 றிச்டர் அளவிலான பூகம்பம் ஏற்பட்டது. ஆயினும் அதனால் உண்டான பாதிப்புகள் குறித்த தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை.

அதற்கு முன்னர், கடந்த புதன்கிழமையும் இந்தோனேசியாவின் வடகிழக்குப் பகுதியில் 6.2 றிச்டர் அளவிலான ஆழ்கடல் பூகம்பம் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டது. அவ்வேளையில் அப்பகுதியை அண்டிய இடங்களில் இருந்த கட்டடங்கள் இடிந்து வீழ்ந்ததாக அறிவிக்கப்பட்டது.

பசுபிக் சமுத்திரத்தின் வெப்ப 'வளையங்கள்' மிக அதிகமாக உள்ள பகுதியிலேயே இந்தோனேசியா அமைந்துள்ளதால், அங்கு எரிமலைகளும் பூகம்பங்களும் அடிக்கடி ஏற்படுவது வழமையாகி விட்டது.

இவ்வருடத்தின் யூலை மாதத்திலும் ஜாவாவிலும் உண்டான7.7 றிச்டர் அளவிலான பூகம்பத்தின் விளைவாக 600 க்கு மேற்பட்ட மக்கள் உயிரிழந்தனர்.

கடந்த 2004 டிசெம்பர் இறுதியில் ஆசியாவை உலுப்பிய மிக சக்திவாய்ந்த சுனாமியால் இந்தோனேசியாவே மிக அதிகளவில் பாதிக்கப்பட்டிருந்தது. 168,000 இந்தோனேசிய மக்களை அந்த அசுர சுனாமி காவு கொண்டமை தெரிந்ததே.

(அ)

நோர்வேயை

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விளக்கம் ஒன்றைப் பெற்றுத் தருமாறு போவரிடம் அமைச்சர் ரம்புக்வெல அரசின் சார்பில் கோரிக்கை விடுத்தார்.

மனிதாபிமான விடயங்கள் குறித்தும் இந்தச் சந்திப்பின்போது போவருடன் ரம்புக்வெல பேச்சு நடத்தினார் என்று பாதுகாப்பு அமைச்சின் ஊடக நிலையம் தெரிவித்தது.

விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் மாவீரர் தின உரையை அரசு முக்கியமானதாகக் கவனத்தில் எடுக்கவில்லை என்றும், எனினும் அவரது உரையை மீளாய்வு செய்து போர் நிறுத்த உடன்படிக்கை செல்லுபடியற்றதாகி விட்டதா என்பது தொடர்பில் விளக்கத்தைப் பெறுவதற்கு அரசு விரும்புகின்றது என்றும் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல, போவரிடம் தெரிவித்தார் என்று கூறப்படுகிறது.

போவருடன் கொழும்புக்கான நோர்வேத் தூதர் ஹான்ஸ் பிரட்ஸ்கரும் வேறு சில ராஜதந்திரிகளும் அமைச்சர் ரம்புக்வெலவைச் சந்தித்தனர். (ஐ)

யாழ்.நகர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்ளப்பட்டன.

அவ்வேளை -

நகரின் நடுவில் அமைந்துள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் கூடுதல் விலைக்கு விற்பனை செய்யப்பட்டதாகக் கூறப்படும் உள்ளியை மீட்ட திடீர் பரிசோனைக் குழுவினர் நியாய விலைக்கு மக்களுக்கு விற்பனை செய்தனர்.

விற்பனை மூலம் கிடைத்த பணம் சம்பந்தப்பட்ட வர்த்தக நிலைய உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஒருவருக்கு கால் கிலோ உள்ளி 30 ரூபாவாக விற்கப்படுவதாக அறிந்த மக்கள் முண்டியடித்து வாங்கியதைக் காணமுடிந்தது. (அ-1)

நான்கு வருட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணுவத் தளபதி நடத்திய பேச்சுகள் மிக ஆக்கபூர்வமாக இருந்தன என்று இலங்கை ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

''சமாதானத் தேடலுக்காக விடுதலைப் புலிகளின் இராணுவப் பலம் அதிகரிக்கப்படுவதை அனுமதிக்கமுடியாது. அவர்களது இராணுவப் பலம் கூடுமானால், இலங்கையின் பாதுகாப்பு பலவீனப்படும்'' என்று இராணுவத் தளபதி தெரிவித்ததாகவும் தெரியவருகிறது.

அமெரிக்க ராஜாங்க அமைச்சின் கட்டடத்தின் 7ஆவது மாடியில் நடந்த இந்த சிரேஷ்ட அதிகாரிகள் மட்ட சந்திப்பின் போது, இலங்கையின் தூதுவர் பெர்னாட் குணதிலகவும் உடனடிருந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

''நாலு வருட யுத்தநிறுத்த உடன்படிக்கைக் காலத்தில் விடுதலைப் புலிகள் தமது இராணுவப் பலத்தைக் கணிசமான அளவு கட்டி வளர்த்திருக்கிறார்கள். அவர்களிடமிருந்த ஆட்லரிகள் இப்பொழுது பத்திலிருந்து 100ஆக அதிகரித்திருக்கிறது. 122 மி.மி. ரக பீரங்கிகளின் தொகையும் இரண்டிலிருந்து 20ஆக உயர்ந்துள்ளது. கனரக மோட்டார்களும் இருபதிலிருந்து 80ஆக உயர்ந்துள்ளது''- என்று பேச்சின் போது தெரிவித்த இராணுவத்தளபதி ''இந்த நாலுவருடகால யுத்த நிறுத்த காலத்தில் புலிகள் தங்களை ஒரு போர்ப்படையாகவே மாற்றிக்கொண்டு விட்டார்கள்'' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

பிரபாகரனின் இராணுவப் பலத்தைப் பலவீனப்படுத்தாதவரை, சர்வதேச சமூகம் வலியுறுத்தி நிற்கும் வழியிலான தீர்வோ, சமாதானமோ கிட்டப்போவதில்லை என்பதே இராணுவத் தளபதியின் கருத்தாக இருந்துவருகிறது போலவே தெரிகிறது.

55ஆவது பிறந்த தின வாழ்த்து

வாமதேவா தியாகேந்திரன்

மாகழித் திங்களில்
மாதர் தீங்குல் யாவை இரைக்கையில்
வாமதேவன் குலத்திற்கென்று
மனிதருள் ஒரு மாமனியாய்
தியாகேந்திரன் உதித்த நன்னாள்!
சிந்தை தளராது - அவர்
செய்து வரும் சேவை பல
நோய்வாய்ப்பட்டு நொந்து போவோர்க்கும்
தொழில் வாய்ப்பின்றி சோர்ந்து இருப்பவர்களுக்கும்
கல்வி ஊக்குவிப்பை நாடி நிற்போர்க்கும்
செய்யும் உதவியே
சேமிப்பாய் செய்தவமாய்
ஊருக்கொரு சேவகனாய்
உங்கள் பணி என்றும் நிலைக்க
அகவை ஐம்பத்தைந்தை
அறக்கொடையாய் போற்றி வாழ்த்துகிறோம்.

தியாகி அறக்கொடை நிறுவன பயனாளிகளும், பணியாளர்களும்.
நல்லூர். (55876)

மாபெரும் இலவசக் கருத்தரங்கு
(இவ்வருடம் O/L பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்குரியது)
இடம்: N.C.A. கல்வி நிலையம், இணுவில்
காலம்:
03.12.06, 04.12.06
(ஞாயிறு, திங்கள்)
நேரம்: 8 மணி

DAY CLASS
LOGIC
பகுதி II
S.S.மனோகரன்
ஆரம்பம்
03.12.2006
ஞாயிறு 10 மணி
N.POOPALASINGAM
PROPRIETER
BEACON

வலுவிழந்தோர் தினத்தை ஒட்டி நாளை பல்வேறு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், டிசெ.2

சர்வதேச வலுவிழந்தோர் தினமான நாளை ஞாயிற்றுக்கிழமை பல்வேறு நிகழ்வுகளை நடத்துவதற்கான ஏற்பாடுகள் குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்தினத்தில் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் வருடந் தோறும் நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

வலுவிழந்தோர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் அவர்களுக்கு உதவக்கூடிய வழி முறைகள் பற்றி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டியது அவசிய மாகும்.

இதனைக் கருத்திற்கொண்டு பொது இடங்களில் இந்நிகழ்வு நடத்தப்பட்டு வருகின்றது.

எனினும் முழுமையான அளவில் பாடசாலைகள், நூல்நிலையங்கள் போன்ற இடங்களில் இந்நிகழ்வுகளை நடத்தி இன்றைய சூழ்நிலையில் வலுவிழந்தோர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றி சமூகத்திற்கு விளக்கவைக்க வேண்டும் என்று வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் இவர்களின் வாழ்க்கைப் பிரச்சினை பற்றி அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் கவனத்தில் எடுத்து அவர்களுக்கான நிவாரண உதவிகளை வழங்க முன் வரவேண்டும் என்றும் வலு விழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் கேட் டுள்ளது. (203)

யாழ். இரத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாகவும் அதன் காரணமாகவே கொழும்பில் இருந்து இரத்தம் எடுத்துவரப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

முன்னர் அனுராதபுரம் மற்றும் ஆஸ்பத்திரிகளில் இருந்து அவசர தேவைக்கு மட்டுமே இரத்தம் இங்கு எடுத்துவரப்படுவது வழக்கம் என்றும் இம்முறையே கொழும்பிலிருந்து விமானம் மூலம் கொண்டு வரப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

கட்டுநாயக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யப் பகுதிக்குள் அனுமதிக்கப்படுவர் என்றும் -

விமான நிலையப் பாதுகாப்பை பலப்படுத்தும் ஏற்பாடாக இந்த நடைமுறை எதிர்வரும் 5ஆம் திகதி தொடக்கம் அமுலுக்குவருகின்றது என்றும் சிவில் விமான சேவைப் பகுதி நேற்று அறிவித்துள்ளது. (அ-1)

தற்கொலைக் குண்டுத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மிகுந்த கட்டுக்காவல்கள், இறுக்கமான பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியில் உள்ள தலைநகரின் இருதயப் பகுதியில் இந்த வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது.

கோட்டபாய ராஜபக்ஷ நேற்றுக் காலை 10.30 மணியளவில் அலரி மாளிகைக்குச் செல்லும் வழியிலேயே அவரை இலக்கு வைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

வாகன அணி பித்தளைச் சந்தியை நெருங்கிய சமயம் திடீரெனப் பெரும் வெடிப்பு ஓசை கேட்டது. உடனடியாக பொலிஸாரும், படையினரும் வானத்தை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர். வாகனத் தொடரணியில் சென்றுகொண்டிருந்த ஓரிரு வாகனங்கள் தீப்பற்றி எரியத் தொடங்கின. கரும்புகை மண்டலம் எழுந்து அப்பகுதியை மூடிமறைத்தது.

பதற்றத்தால் பயணிகள் அங்கும் இங்குமாகத் தடுமாறி தலைதெறிக்க ஓடினர்.

பொலிஸாரும், படையினரும் உடனடியாக அந்தப் பகுதிக்குள் யாரும் செல்ல முடியாதவாறு மூடினர். வாகனங்கள் தீப்பற்றி எரிந்ததால் உடனடியாகத் தீயணைப்புப் பிரிவினர் வரவழைக்கப்பட்டனர்.

அந்தப் பகுதியில் கட்டுக் காவல் இறுக்கமாக்கப்பட்டு சோதனைகள் நடத்தப்பட்டன.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பயணம் செய்த கார், குண்டு வெடிப்பின் சிதல்களால் தாக்கப்பட்டது. அவரது வாகன அணியில் கொமோண்டோப் படையினர் பயணம் செய்த 'பிக்-அப்' வாகனம் ஒன்று பலத்த சேதமடைந்தது. மேலும் பல வாகனங்களுக்குச் சேதங்கள் ஏற்பட்டன.

சேதமடைந்த காரில் இருந்து பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டார் கோட்டபாய. உடனடியாகவே வேறு வாகனம் மூலம் பலத்த பாதுகாப்புடன் அவர் அலரி மாளிகைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அவரது காரின் கண்ணாடிகள் சிதறின. அவருக்குச் சிறு கீறல் காயங்கள் ஏற்பட்டன.

அவரது ஆடையில் குருதிக் கறைகள் காணப்பட்டன. தாக்குதலில் உயிர்பிழைத்து, பலத்த பாதுகாப்புடன் அலரி மாளிகைக்கு வந்து சேர்ந்த சகோதரர் கோட்டபாயவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கட்டித் தழுவி உணர்ச்சி பொங்க அரவணைத்தார்.

தாக்குதலின் பின் கோட்டபாயவுக்கு என்ன நடந்தது என்பது தெரிய வராததால் ஊடக வட்டாரங்களில் பெரும் பரபரப்புக் காணப்பட்டது. அவர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என்றும், தாக்குதலில் சிக்கி அவரும் உயிரிழந்து விட்டார் என்றும் சிறிது நேரம் வதந்திகள் பரவின. எனினும், கோட்டபாய மயிரிழையில் உயிர்தப்பி விட்டார் என்ற தகவல் பின்னர் அலரி மாளிகையில் இருந்து உறுதி செய்யப்பட்டது.

அலரி மாளிகையில் இருந்தவாறே கோட்டாய சில ஊடகங்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். தாம் பாதுகாப்பாகத்தப்பிவிட்டதைத் தனது குரலிலேயே அவர் கூறுவதை வானொலிச் சேவைகள் ஒலிபரப்பின.

அதிவிசேட பிரமுகர்களுடன் வாகன அணி செல்லும்போது செய்யப்படும் அத்தனை பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்த நிலையிலும் கோட்டபாயவின் வாகன அணி குண்டுத் தாக்குதலில் சிக்கி இருக்கிறது.

இது ஒரு தற்கொலைப் பாணித் தாக்குதல் என்பதைச் சம்பவம் நடந்த கையோடு இராணுவத் தரப்பு உறுதி செய்தது.

ஓட்டோவில் தற்கொலையாளி

வாகன அணி சென்று கொண்டிருந்த சமயம் கோட்டபாய ராஜபக்ஷ வின் காரை இலக்கு வைத்து ஓட்டோவில் வந்த தற்கொலையாளி ஒருவரே அதனை வெடிக்க வைத்து இத்தாக்குதலை நடத்தியிருக்கக் கூடும் என்று பாதுகாப்புத் தரப்பினர் சந்தேகிக்கின்றனர்.

ஆயினும், விசேட பிரமுகர்களின் வாகன அணி செல்லும் வழியில் அவற்றுக்கு நெருக்கமாகச் செல்ல ஓட்டோவைப் பொலிஸார் அனுமதித்திருக்க வாய்ப்பில்லை. எனவே, வெடிகுண்டு நிரப்பப்பட்ட ஓட்டோ, வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டு வெடிக்க வைக்கப்பட்டிருக்கலாம் என்றும் வேறு சில பாதுகாப்பு வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

ஓட்டோ ஒன்றின் சிதறிய பாகங்களும், உடல் ஒன்றின் சிதைந்த பகுதிகளும் சம்பவம் நடந்த இடத்தில் காணப்பட்டன என்று முதலில் வெளியான தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை, தனியாரின் வாகனங்கள் சிலவும் தாக்குதலில் சிக்கிச் சேதமடைந்திருக்கின்றன.

வாகனங்களில் பயணித்தோர் மற்றும் வீதியில் காணப்பட்டோர் உட்பட ஏழுக்கும் மேற்பட்ட சிவிலியன்களும் இந்தக் குண்டுத்தாக்குதலில் காயமடைந்து மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டனர்.

தாக்குதல்கள் நடக்கும் என்ற எதிர்பார்ப்பில் கொள்ளுப்பிட்டி உட்பட தலைநகரின் சந்து பொந்து கள் எங்கும் பாதுகாப்புத் தரப்பினரின் கண்காணிப்பு கடந்த சில வாரங்களாகத் தீவிரப்படுத்தப்பட்டிருந்தது. இந்த நிலையிலும் நகரின் இருதயப்பகுதிக்குள் வெடி குண்டுடன் நுழைந்து தாக்குத் நடத்தத் தற்கொலையாளியால் முடிந்திருக்கிறது. இது பாதுகாப்புத் தரப்பினருக்குப் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது.

அரசு கண்டனம்

தனித் தமிழீழ அரசுதான் தமிழர்களுக்குள்ள ஒரே வழி என்று விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் அறிவித்த பின்னர் நடத்தப்பட்டிருக்கும் இத் தாக்குதலுக்கு விடுதலைப் புலிகளே பொறுப்பு என்று அரசு குற்றஞ்சாட்டி உள்ளது.

இத்தாக்குதலை நடத்தியதற்காக விடுதலைப் புலிகளுக்கு சர்வதேச சமூகம் கண்டித்து அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று அரசு வெளியிட்ட ஓர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

புதிய பிரிவுகள் ஆரம்பம்
கணனித்துறையில் குறைசார் வல்லுனராக
AIMS உடன் இணையுங்கள்
○GNU/Linux Administration & Networking
○Oracle 10g
○SQL Server
○VB.NET (With Project)
○C#.NET (With Project)
○ASP.NET (With Project)
○Java (With Project)
○HTML/XML
○Visual Basic (With Project)
○Hardware Engineering
○ICT
○MS.Office 2003
Computer Reparing Services & Software Designing
ஆரம்பம்:-02-12-2006
நேரம்:-10.00AM
AIMS
முற்றிலும் மாறுபட்ட Real Practical Environment
#118, Palaly Road, Thirunelvely, Jaffna. (Near Postbox Junction
Center for FOSS & LAMP

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.12.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org